*கவனிக்க.- 2018.03.29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2066 - 2018 අප්‍රේල් මස 06 වැනි සිකුරාදා - 2018.04.06

*2066 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 656 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 671 |

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2018, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*“ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.”*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானிகளில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து **சிங்கள மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து **தமிழ் மொழி** : மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, **சிங்கள மொழி** :யில் அல்லது **தமிழ் மொழி** :யில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :.

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 **சிங்கள மொழி** : மூலத்தில் அல்லது **தமிழ் மொழி** : மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி -புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

03. விண்ணப்பதாரரின் வயது, 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

05. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 15.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | கற்பிட்டி | கற்பிட்டி நகரப் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம். |
| புத்தளம் | கற்பிட்டி | நுரைச்சோலைப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம். |

4-247

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பதாரரின் வயது, 45 வருடங்களிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

05. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

06. இதற்காக தேவையான விணணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு I" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 15.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | கற்பிட்டி | தலவில பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கற்பிட்டி பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம். |
| புத்தளம் | கற்பிட்டி | குறிஞ்ஞம்பிட்டிய பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் கற்பிட்டி பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம். |
| புத்தளம் | முந்தலம் | முந்தலம் பிரிவின் பிறப்பு, இறப்பு மற்றும் புத்தளம்பற்று பிரிவின் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், புத்தளம். |

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள தமிழ் மொழியில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்யும் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

03. விண்ணப்பதாரரின் வயது, 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விண்ணப்பம் கோரப்படும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய மேலதிக விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும். அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

05. இதற்காக தேவையான விண்ணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக் கொள்ள இயலும்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018.05.07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மன்னார் நகரம் | மன்னார் நகர கிழக்குப் பிரிவின் பிறப்பு மற்றும் இறப்பு வைத்திய பதிவாளர் | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், மன்னார் |

4-249

---

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

தமிழ் மொழியில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (பொது) பதிவாளர் பதவி - மன்னார் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள தமிழ் மொழியில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (பொது) பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பதாரரின் வயது, 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

05. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

06. இதற்காக தேவையான விணணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மன்னார் | மன்னார் நகரம் | மாந்தை தெற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மன்னார் நகர பிரிவில் விவாகப (பொது) பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மன்னார் |
| மன்னார் | மன்னார் நகரம் | தலைமன்னார் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மன்னார் நகர பிரிவில் விவாகப (பொது) பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மன்னார் |
| மன்னார் | நானாட்டான் | முருங்கன் பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் நானாட்டான் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மன்னார் |
| மன்னார் | மாந்தை மேற்கு | பெருங்களிப்பற்று பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் மாந்தை மேற்கு பிரிவில் விவாகப (பொது) பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மன்னார் |
| மன்னார் | முசலி | பெரிய பொல்லாச்சி பொற்கேணி பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் முசலி பிரிவில் விவாகப (பொது) பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், மன்னார் |

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### தமிழ் மொழியில் பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (பொது) பதிவாளர் பதவி - வவுனியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (பொது) பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகப் பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பதாரரின் வயது, 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

05. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமூர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

06. இதற்காக தேவையான விணணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| வவுனியா | வவுனியா தெற்கு | மேல்பற்று கிழக்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி (தமிழ்) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலாளர் அலுவலகம், வவுனியா. |

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

### பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (கண்டிய/பொது) பதிவாளர் பதவி - வவுனியா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பிரிவில் உள்ள பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/மேலதிக விவாகம் (பொது) பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. விண்ணப்பதாரர் உரிய பிறப்பு, இறப்பு மற்றும் விவாகம்/ மேலதிக விவாகம் (பொது) பிரிவினுள் நிரந்தர வதிவிடதாரியாகவும் மற்றும் போதியளவான ஆதனத்திற்கு உரித்தான பிரதேசவாசிகளின் நன்மதிப்பினைப் பெறுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02. இந்த பதவிக்காக ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க இயலும்.

03. விண்ணப்பதாரரின் வயது, 45 வயதிற்குக் குறையாததாக இருத்தல் வேண்டும் என்பதுடன் 62 வயதிற்கு மேற்படாததாக இருத்தல் வேண்டும்.

04. விவாகப் பதிவாளர் பதவிக்காக விண்ணப்பிப்பவர்கள் திருமணமானவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் திருமணமாகி 05 வருடங்களுக்கு குறையாததாக இருத்தல் வேண்டும். விதவைகள்/தபுதாரர் அல்லது விவாகரத்தானவராயிருத்தல் கூடாது.

05. விண்ணப்பம் கோரப்படும் விவாகம், பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்தல் பிரிவிற்கு உட்புகுத்தப்படும் கிராம பட்டியல்கள்/ கிராம அலுவலர் பிரிவு, கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் ஆகிய ஏனைய விபரங்கள் கீழ் குறிப்பிடப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட மாவட்டச் செயலகம், பிரதேச செயலகம் அல்லது உரிய காணி மற்றும் மாவட்டச் செயலகம், கிராம அலுவலர் அலுவலகம், சமுர்த்தி அபிவிருத்திச் சங்க அலுவலகம் மற்றும் தபால் அலுவலகம் ஆகிய பிரிவின் பிரசித்தமான இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவித்தல்களில் பார்த்துக்கொள்ள இயலும்.

06. இதற்காக தேவையான விணணப்பங்கள் மற்றும் கிராம பட்டியல்கள் / கிராம அலுவலர் பிரிவுகள் உள்ளடங்கிய "இணைப்பு 1" உரிய மாவட்டத்தின் மாவட்டச் செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்தில் மற்றும் உரிய காணி மற்றும் மாவட்ட பதிவகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் பெற்றுக்கொள்ள இயலும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2018, மே 07 ஆந் திகதி அல்லது அதற்கு முன்பு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

நீல் த அல்விஸ்,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2018, மாச்சு 14.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பம் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பம் அனுப்பப்பட வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| வவுனியா | வவுனியா தெற்கு | கிழக்கு மூலை தெற்கு பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விவாகம் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி (சிங்கள மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், வவுனியா. |
| வவுனியா | வவுனியா தெற்கு | மாமடுவ பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலாளர் பிரிவில் விவாகம் (கண்டிய/ பொது) பதிவாளர் பதவி (சிங்கள மொழி) | மாவட்டச் செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், வவுனியா. |

**தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்**

*(சமூக வலுவூட்டல், நலநோம்புகை மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு)*

உள்வாரி மற்றும் வெளிவாரியான விண்ணப்பதாரர்கள் :

*1.* **பதவி.- சிரேஷ்ட பயிற்சி உத்தியோகத்தர் (பதவிகள் 03)**

(i) **வயதெல்லை.-** விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதுக்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.) ;

(ii) **கல்வித் தகைமை :**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலைமானி பட்டத்தினையும் சமூக விஞ்ஞான பாடத்தில் கலாநிதி பட்டத்தினையும் பெற்றிருத்தல் ;

மற்றும்

அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 10 வருடத்திற்கு குறையாத சமூகப்பணி பயிற்சி பிரிவுகளில் அனுபவம் இருத்தல்

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலைமானி பட்டத்தினையும் சமூக விஞ்ஞான பாடத்தில் பட்டப்பின் படிப்பினை பயின்றிருத்தல்.

மற்றும்

(iii) **அனுபவம் :**

(அ) அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் 15 வருடத்திற்கு குறையாத சமூகப்பணி பயிற்சி பிரிவுகளில் அனுபவம் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு**

**தகைகமை**

(அ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் பயிற்சி உத்தியோகத்தர் I தரப் பதவியில் குறைந்தது 5 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்;

அல்லது

(ஆ) சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலைமாணி பட்டத்தினை பெற்றிருத்தலும் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் பயிற்சி உத்தியோகத்தர் - I தரப் பதவியில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iv) **நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :**

| | |
|---|---|
| குறித்த நிருவாக அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(v) ***சம்பள அளவுத்திட்டம்.***- *AR - 2- 2016 - ரூபா 71,585 - 10 X 1,910 - ரூபா 90,685 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I ஆம் அட்டவணைக்கேற்ப அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் படி சம்பளம் வழங்கப்படும். AR - 2 - 2006A - ரூபா 34,550 - 10 X 925 - ரூபா 43,880 (மாதாந்தம்). 2018 அடிப்படைச் சம்பளம் - ரூபா 56,771.*

***2.* பதவி.- சிரேஷ்ட ஆய்வு உத்தியோகத்தர் (பதவிகள் 03) :**

(i) **வயதெல்லை.**- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.)

(ii) **கல்வித் தகைமை :**

*(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலைமானி பட்டத்தினையும் சமூக விஞ்ஞான பாடத்தில் கலாநிதி பட்டத்தினையும் பெற்றிருத்தல் ;*

*மற்றும்*

*அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 10 வருடத்திற்கு குறையாத சமூகப்பணி ஆய்வு பிரிவுகளில் அனுபவம் இருத்தல்*

*அல்லது*

*(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலைமானி பட்டத்தினையும் சமூக விஞ்ஞான பாடத்தில் பட்டப்பின் படிப்பினை பயின்றிருத்தல்.*

*மற்றும்*

(iii) **அனுபவம் :**

*(அ) அரச அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் 15 வருடத்திற்கு குறையாத சமூகப்பணி ஆய்வு பிரிவுகளில் அனுபவம் பெற்றிருத்தல்.*

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு**

***தகைமை***

(அ) தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் ஆய்வு உத்தியோகத்தர் I தரப் பதவியில் குறைந்தது 5 வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல்;

*அல்லது*

*(ஆ) சமூக விஞ்ஞானப் பாடங்களில் கலைமாணி பட்டத்தினை பெற்றிருத்தலும், தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தில் ஆய்வு உத்தியோகத்தர் - I தரப் பதவியில் குறைந்தது 3 வருட அனுபவம் பெற்றிருத்தல்.*

(iv) **நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :**

| | |
|---|---|
| *குறித்த நிருவாக அனுபவம்* | *30 புள்ளிகள்* |
| *குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம்* | *30 புள்ளிகள்* |
| *ஏனைய திறன்கள்* | *15 புள்ளிகள்* |
| *நேர்காணலின் போதான முன்னேற்றம்* | *25 புள்ளிகள்* |
| *மொத்தம்* | *100 புள்ளிகள்* |

(v) **சம்பள அளவுத்திட்டம்**.- AR - 2- 2016 - ரூபா 71,585 - 10 x 1,910 - ரூபா 90,685 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I ஆம் அட்டவணைக்கேற்ப அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் படி சம்பளம் வழங்கப்படும். AR - 2 - 2006A - ரூபா 34,550 - 10 x 925 - ரூபா 43,880 (மாதாந்தம்). 2018 அடிப்படைச் சம்பளம் - ரூபா 56,771.

3. **பதவி.- விரிவுரையாளர் II (பதவிகள் 04)** :

(i) **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) **கல்வித் தகைமை** :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில்/ உயர் கல்வி நிறுவனமொன்றில் சமூகப் பணியில் (Social Work) முதலாம் அல்லது இரண்டாம் வகுப்பின் (உயர்தரப்) பட்டத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/ உயர் கல்வி நிறுவனமொன்றில் சமூக விஞ்ஞான முதலாவது பட்டத்துடன் சமூகப் பணியில் (Social Work) பட்டப்பின் படிப்பினை பயின்றிருத்தல்.

(iii) **நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை** :

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக தொழில் வாண்மை அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iv) **சம்பள அளவுத்திட்டம்**.- AR - 1- 2016 - ரூபா 51,285 - 5 x 1,135 - 5 × 1,335 - 15 × 1,590 - ரூபா 87,485 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I ஆம் அட்டவணைக்கேற்ப அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் படி சம்பளம் வழங்கப்படும். AR - 1 - 2006A - ரூபா 24,725 - 5 x 550 -5 × 645 - 15 × 770 - ரூபா 42,250 (மாதாந்தம்). 2018 அடிப்படைச் சம்பளம் - ரூபா 40,661.

4. **பதவி.- உதவி நூலகர் II (பதவி 01)** :

(i) **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) **கல்வித் தகைமை** :

***வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு***

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட முதலாம் பட்டத்துடன் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனமொன்றிற்குரிய நூலகராக குறைந்தது 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல் ;

***உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு***

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் முகாமைத்துவ உதவியாளர் - I தரத்தில் (தொழில்நுட்பம் சாராத) பதவியில் நிருவாக பணிகள் பற்றிய 05 வருட திருப்திகரமாக சேவையாற்றி அனுபவம் பெற்றிருத்தல்;

அல்லது

இணைந்த உத்தியோகத்தர், செயற்படுத்துகை/ ஆலோசனை சேவைகளின் பதவியொன்றில் குறைந்த பட்சம் 05 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்;

(iii) **நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :**

| | |
|---|---|
| குறித்த துறையில் அனுபவம் | 30 புள்ளிகள் |
| குறித்த மேலதிக அனுபவம் | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்கள் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iv) **சம்பள அளவுத்திட்டம்.-** JM - 1-1-2016 - ரூபா 42,600 - 10 x 755 - 18 × 1,135 - ரூபா 70,580 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I ஆம் அட்டவணைக்கேற்ப அச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் படி சம்பளம் வழங்கப்படும். JM 1 - 1- 2006A - ரூபா 20,525 - 10 x 365 -18 × 550 - ரூபா 34,075 (மாதாந்தம்). 2018 அடிப்படைச் சம்பளம் - ரூபா 33,770.

5. **பதவி.- மொழிபெயர்ப்பாளர் III (சிங்களம்/ஆங்கிலம்) (பதவி 01) :**

(i) **வயதெல்லை.-** விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) **கல்வித் தகைமை.-**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழிப் பாடத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம்

அல்லது

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் ஆங்கில மொழி, ஆங்கில மொழி இலக்கியம், ஆங்கில மொழி கற்பித்தல் முறை உள்ளடங்கிய பட்டம்.

மற்றும்

(இ) ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட உயர் கல்வி நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்ட ஒரு வருடத்திற்கு குறையாத டிப்ளோமா பாடநெறியினை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ஈ) ஆங்கில மொழி கற்பித்தல் தொடர்பாக அரச பாடசாலை அல்லது வேறு அரச உயர் கல்வி நிறுவனம் ஒன்றில் 03 வருடங்களக்கு குறையாத அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) **நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை :**

| | |
|---|---|
| பதவியுடன் தொடர்பான விடய அனுபவம் | 30 புள்ளிகள் |
| பதவியுடன் தொடர்பான மேலதிகத் தகுதி | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்களும் ஆற்றலும் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(iv) **சம்பள அளவுத்திட்டம்**.- MA-4-2016 - ரூபா 37,970 - 10 x 755 - 15 x 930 - 5 x 1,135 - ரூபா 65,145 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I ஆம் அட்டவணைக்கேற்ப) அச்சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

MA 4 - 2006A - ரூபா 18,230 - 10 x 365 - 15 x 450 - 5 x 550 - ரூபா 31,380 (மாதம்) 2018 அடிப்படைச் சம்பளம் ரூபா 30,074.

6. **பதவி.- மொழிபெயர்ப்பாளர் III (சிங்களம்/ஆங்கிலம்) (பதவி 01)** :

(i) **வயதெல்லை.**- விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்தன்று 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு அதிகரிக்காமலும் இருத்தல். (தற்போது அரச, மாகாண அரச சேவையில் பணியாற்றுபவர்கள் மற்றும் அரச நியதிச் சபைகளில் பணியாற்றுவோருக்கு உயர்ந்தபட்ச வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.)

(ii) **கல்வித் தகைமை.**-

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிங்களம்/ஆங்கில மொழிகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்துடன் க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் சிங்கள மற்றும் ஆங்கில மொழி/இலக்கியத்தில் திறமைச் சித்தியைப் பெற்றிருத்தல் ; அத்துடன் சிங்களம்/ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் நிபுணத்துவம் ;

மற்றும்

(ஆ) அரசாங்க அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில/ சிங்கள மொழிபெயர்ப்பாளராக 2 வருட அனுபவம் பெற்றிருத்தல்.

(iii) இணைத்துக் கொள்ளும் முறை.- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படுகின்ற நேர்காணல் குழுவின் மூலம் நேர்காணல் நடாத்தப்படும். உயர் புள்ளிகளை பெற்றவர்களுள் திறமையின் ஒழுங்கின் அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

(iv) **நேர்காணலுக்கான புள்ளி வழங்கும் முறை** :

| | |
|---|---|
| பதவியுடன் தொடர்பான விடய அனுபவம் | 30 புள்ளிகள் |
| பதவியுடன் தொடர்பான மேலதிகத் தகுதி | 30 புள்ளிகள் |
| ஏனைய திறன்களும் ஆற்றலும் | 15 புள்ளிகள் |
| நேர்காணலின் போதான முன்னேற்றம் | 25 புள்ளிகள் |
| மொத்தம் | 100 புள்ளிகள் |

(v) **சம்பள அளவுத்திட்டம்**.- MA-4-2016 - ரூபா 37,970 - 10 x 755 - 15 x 930 - 5 x 1,135 - ரூபா 65,145 (மாதாந்தம்) சம்பள அளவுத்திட்டம் கிடைக்கப்பெறும். (2016.04.25 ஆந் திகதியையுடைய முகாமைத்துவ சேவை சுற்றுநிருபம் 02/2016 I ஆம் அட்டவணைக்கேற்ப) அச்சுற்றுநிருபத்தின் அட்டவணை II இன்படி சம்பளம் வழங்கப்படும்.

MA 4 - 2006A - ரூபா 18,230 - 10 x 365 - 15 x 450 - 5 x 550 - ரூபா 31,380 (மாதம்) 2018 அடிப்படைச் சம்பளம் ரூபா 30,074.

**அனைத்து பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்** :-

(i) இப்பதவி நிரந்தரமானது ;

(ii) அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வீதத்திற்கு அமைய ஊழியர் சேமலாப நிதியத்துக்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(iii) மூன்று வருட தகுதிகாண் நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தல்.

**குறிப்பு**.- இப்பதவி வெற்றிடங்கள் பிரதான அலுவலகத்தில் மாத்திரம் காணப்படுவதுடன் தெரிவாகும் விண்ணப்பதாரிகள் அந்நிலையங்களில் கடமையாற்ற வேண்டும்.

**சேவை நிபந்தனை.**- 1992 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனச் சட்டத்தின் கட்டளைகளுக்கும் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் பிரமாணங்களுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

விண்ணப்பதாரியின் முழுமையான தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பங்கள் கீழே குறிப்பிட்ட முகவரிக்கு 2018.05.02 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறுமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட வேண்டும். முழுமையற்ற, தெளிவற்ற அல்லது தாமதமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அரசாங்கத் துறையில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்கள/நிறுவனத் தலைவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்குறித்த அறிவுறுத்தல்களுக்கிணங்க அமையாத, பூரணமற்ற மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும் என்பதோடு பதவியினை பெற்றுக்கொள்வதற்காக எவ்விதத்திலேனும் அழுத்தம் கொடுப்பது தகுதியின்மையாக கருதப்படும். தெரிவுசெய்து பட்டியல்படுத்தப்பட்ட பின்னர் தகுதிபெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் என்பதோடு பதவிகள் தொடர்பாக தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் முடிவே இறுதி முடிவு.

(கலாநிதி) ரிட்லி ஜயசிங்ஹ,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்,
இல. 488ஏ, நாவல வீதி,
இராஜகிரிய.
2018, மாச்சு 23.

10-367

---

## கமத்தொழில் அமைச்சு

கமநல அபிவிருத்தித் திணைக்களம்

### கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் ஆரம்ப மட்ட தேர்ச்சியற்ற சேவைத் தொகுதியின் (PL01 -2006A) கீழ் III ஆம் தரத்தின் காவலாளி மற்றும் தொழிலாளி பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்குரிய விண்ணப்பம் கோரல் - 2018

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நாடெங்கிலும் வெற்றிடமாகவுள்ள காவலாளி மற்றும் தொழிலாளி பதவியின் பொருட்டு பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. சேவையில் சேர்த்துக் கொள்வதற்கான நிபந்தனைகள் :**

1.1 காவலாளி பதவியின் பொருட்டு ஆண் விண்ணப்பதாரிகள் மாத்திரமும் தொழிலாளி பதவியின் பொருட்டு பெண் மற்றும் ஆண் ஆகிய இருபாலாலரும் விண்ணப்பிக்கலாம்

1.2 இப் பதவி நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவு நடைமுறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு உட்பட்டதாகும். விதவைகள்/ அநாதைகள்/ தபுதாரர்கள்,/ அநாதைகள் ஓய்வூதிய நிதியத்துக்குப் பங்களிப்புச் செய்ய வேண்டியதுடன் அரசாங்கத்தினால் காலத்திற்குக் காலம் பரிந்துரைக்கப்படும் முறைக்கமைய பங்களிப்பினைச் செலுத்த வேண்டும்.

1.3 அரசாங்க சேவையின் நியமனம் தொடர்பான 2009.02.20 ஆம் திகதிய 1589/30 வர்த்தமானிப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதி ஏற்புடையதாகும்.

1.4 தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், நிதிப் பிரமாணத்திற்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், காலத்திற்குக் காலம் அரசினால் விடுக்கப்படும் ஏனைய சட்ட திட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கும் பணிதல் வேண்டும்.

**2. பொதுவான தகைமைகள் :**

2.1 இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

2.2 நன்நடத்தை உடையவராகவும் நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்கு பொருத்தமான, உடல் மற்றும் உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

2.3 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது 18 இற்குக் குறையாமலும் 45 இற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2.4 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அலுவலக நடைமுறை விதியின் V ஆம் அத்தியாயத்திற்கமைய அரசாங்க சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு பொருத்தமற்ற நபரல்லாது இருத்தல் வேண்டும்.

**3. கல்வித் தகைமைகள் :**

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாதவாறு ஆகக் குறைந்தது இரண்டு விசேட சித்திகள் உள்ளடங்கலாக ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**4. வேறு தகைமைகள் :**

4.1 வேறு கல்வித் தகைமைகள், விளையாட்டுத் திறன், மற்றும் விசேட பயிற்சிச் சான்றிதழ் விசேட தகைமைகளாகக் கருதப்படும்.

4.2 அனைத்து விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமாகும்.

5. கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் நியமிக்கப்படும் பரீட்சார்த்த சபையொன்றினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டு விண்ணப்பதாரர்கள் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளில் திறமை ஒழுங்கிற்கமைய தகைமைகளை பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரர்கள் தொழிலாளி மற்றும் காவலாளி பதவியின் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவார். விண்ணப்பதாரிகள் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட விரும்பும் மொழி மூலத்தை தெளிவாக விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.

**6. சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம் ):**

பொது நிர்வாக சுற்றறிக்கை 3/2016 இல் PL 1 -2016 சம்பள தொகுதியின் கீழ் ரூபா 24250 – 10 x 250 – 10 x 270 – 10 x 300 – 12 x 330 – ரூபா 36410 ஆகும்

7. விண்ணப்பப்படிவத்தை வைத்து அனுப்பும் தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கப்படும் பதவியை தெளிவாகக் குறிப்பிட்டு, விண்ணப்பப் படிவத்தை 2018.05.04 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், இல 42. சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, த.பெ.இல 537, கொழும்பு 07 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மட்டும் அனுப்பி வைக்க வேண்டும்.

**ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையுள்ள அனைத்து உத்தியோகத்தர்களும் நாட்டின் தேவையான எந்தவொரு பகுதியிலும் கடமை புரிவதற்கு இணங்கியுள்ளதை கவனத்திற் கொள்வதுடன் முதல் நியமனம் கிடைக்கப்பெறும் மாவட்டத்தினுள் ஆகக் குறைந்தது 05 வருடங்களாயினும் கடமை புரிவது அவசியமாகும் என்பதுடன், விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதிக்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**

8. விண்ணப்பதாரர்களின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்க வேண்டும்:-

8.1 ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
8.2 செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
8.3 செல்லுபடியாகும் சாரதி அனுமதிப் பத்திரம்.

9. காவலாளி பதவியின் பொருட்டு விண்ணப்பிக்கின்ற விண்ணப்பதாரிகள் மட்டும் 03 மாதத்திற்குள் பெற்றுக் கொண்ட கிராம அலுவலர் சான்றிதழ் மற்றும் பொலிஸ் அறிக்கை ஆகியவற்றை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிக்க வேண்டும்.

10. இதில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமொன்று தொடர்பில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

டீ.எம்.எம்.பீ.வீரசேகர,
கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம்.

கமநல அபிவிருத்தித் திணைக்களம்,
இல 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை,
த.பெ . 537
கொழும்பு 07
2018, மாச்சு 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் III ஆம் தரத்தின் காவலாளி மற்றும் தொழிலாளி பதவியின் பொருட்டு ஆட்சேர்ப்பு செய்வதற்குரிய விண்ணப்பப்படிவம்**

[ ]
அலுவலகப் பாவனைக்காக

விண்ணப்பிக்கும் மொழி மூலம்
சிங்களம் (2)
தமிழ் (3) [ ]
ஆங்கிலம் (4) (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

விண்ணப்பிக்கும் பதவி

| | | | |
|---|---|---|---|
| காவலாளி | | தொழிலாளி | |

(உரிய கூட்டினுள் புள்ளடியிடவும்)

1. பால் : பெண் [ ] ஆண் [ ]
(உரிய கூட்டினுள் புள்ளடியிடவும்)

2. திருமணமானவர்/ திருமணமாகாதவர் :

| | | | |
|---|---|---|---|
| திருமணமானவர் | | திருமணமாகாதவர் | |

(உரிய கூட்டினுள் புள்ளடியிடவும்)

3. முதலெழுத்துடன் பெயர் : ..........................................................................................

4. முழுப்பெயர் : ..........................................................................................
..........................................................................................

5. தேசிய ஆளடையாள அட்டை இல: [ | | | | | | | | | | | ]

6. நிரந்தர முகவரி : ..........................................................................................
..........................................................................................

7. பிறந்த திகதி :
வருடம்: [ | | | ] மாதம்: [ | ] திகதி: [ | ]

8. வயது (விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு) :
வருடங்கள்: [ | ] மாதங்கள்: [ | ] நாட்கள்: [ | ]

09. தொலைபேசி இல :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

10. கல்வித் தகைமை:

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதற் தடவை | | | இரண்டாம் தடவை | | |
| வருடம் | | | வருடம் | | |
| சுட்டெண் | | | சுட்டெண் | | |
| தொ.இல. | பாடம் | பெறுபேறு | தொ.இல. | பாடம் | பெறுபேறு |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

11. வேறு தகைமைகள் :
........................................................................................................
........................................................................................................

12. கடமை புரிவதற்கு விரும்பும் மாவட்டங்கள் தங்கள் விருப்பத் தேர்வுக்கமைய முன்னுரிமை அடிப்படையில்

1. ..........................................
2. ..........................................
3. ..........................................
4. ..........................................
5. ..........................................

13. நீங்கள் எப்பொழுதாயினும் குற்றச்சாட்டொன்றின் பொருட்டு நீதி மன்றத்தினால் தண்டிக்கப்பட்டுள்ளீர்களா?
(உரிய கூட்டினுள் √ அடையாளம் இடவும். ஆம் எனில் விபரத்தைக் குறிப்பிடவும்)

இல்லை ☐ ஆம் ☐

........................................................................................................
........................................................................................................

14. விண்ணப்பதாரியின் உறுதியுரை:

அ. இவ் விண்ணப்பப் படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்த மட்டில் சரியானவை எனவும் உண்மையானவை எனவும் உறுதியளிக்கிறேன். இதில் ஏதேனுமொரு விடயம் பூரணப்படுத்தப்படாமையால் அத்துடன்/ அல்லது பிழையானதாக பூரணப்படுத்துவதால் ஏற்படக்கூடிய இழப்பினை பொறுப்பேற்க இணங்குகிறேன். அத்துடன் இங்கு அனைத்து பகுதிகளும் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது எனவும் உறுதியளிக்கிறேன்.

ஆ. என்னால் வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை உண்மைக்குப் புறம்பானவை என நிரூபிக்கப்படுமிடத்து , நியமிக்கப்படுவதற்கு முன்னர் தகைமையற்றவர் எனவும் நியமிக்கப்பட்டதன் பின்னர் சேவையிலிருந்து இடைநீக்கம் செய்யப்படுவதற்கு உட்படுவேன் எனவும் நான் அறிவேன்.

திகதி:..................... ..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

4-437

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

*இலங்கை நிர்வாக சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கை கட்டடக் கலைஞர் சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை -2017 (II) மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கை கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2018 (I)*

இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை 2017 (II) மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையிலுள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை - 2018 (I) ஆனது அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கண்காணிப்பு மற்றும் வழிநடாத்தல் என்பவற்றின்கீழ் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தினால் 2018.05.05 ஆந் திகதி முதல் 2018.05.20 ஆந் திகதிவரை வார இறுதி நாட்களில் கொழும்பில் நடாத்தப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. மேற்படி சேவைகளுக்கு ஏற்புடையதாக நடாத்துவதற்குரிய வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைபெறும் :-

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | குறியீடு |
|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | SLAS 1 |
| 2 | இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | SLES |
| 3 | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | SLSS |
| 4 | இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | SLArS |
| 5 | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLAcS 1 |
| 6 | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLPS 1 |
| 7 | மேற்குறித்த பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமான ஏனைய சேவைகள் | Other |
| 8 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLAS 2 |
| 9 | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLAcS 2 |
| 10 | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | SLPS 2 |

3. அலுவலர் தாம் விரும்பிய ஒவ்வொரு பாடத்திற்கும் வெவ்வேறாக மற்றும் ஒன்றுக்கொன்று முரணான தடவைகளில் தோற்றலாம். ஆயினும், விதித்துள்ள காலப்பகுதியினுள் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் அவசியமாகும்.

4. இப்பரீட்சை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சை நடாத்துதல் தொடர்பாக அவரால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். இச்சட்டதிட்டத்தினை மீறும் சந்தர்ப்பத்தில் ஒழுக்காற்று அதிகாரியினால் விதிக்கப்படும் தண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.

5. இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு இணையத்தின் ஊடாக நிகழ்நிலை முறையில் (Online) இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இனுள் பிரவேசிப்பதன் மூலம் மட்டுமே நிகழ்த்த

முடியும். இணையத்தளத்தின் பிரதான முகப் பக்கத்தில் வலது பக்கமுள்ள பட்டியலில் "Apply Online" என்னும் பகுதிக்குப் பிரவேசித்து தமக்குரிய பரீட்சையினைத் தெரிவுசெய்வதன் மூலம் விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்பிக்கொள்ள முடியும்.

பரீட்சை விண்ணப்பப்பத்திரத்தினை நிரப்புவதற்கு 2018.04.06 ஆந் திகதி மு. ப. 8.00 தொடக்கம் 2018.04.23 ஆந் திகதி இரவு 12.00 வரையான காலப்பகுதியினுள் மட்டுமே பூரணப்படுத்த முடியும்.

6. **பரீட்சைக் கட்டணங்கள்**.- முதல் தடவையாகப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் எந்தவித பரீட்சைக் கட்டணங்களையும் செலுத்த வேண்டியதில்லை. இதற்கு முன்னர் பரீட்சார்த்தி ஒருவர் விண்ணப்பத்தினை மேற்கொண்டு இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் அனுமதி ஒன்று வழங்கிய பின்னருங்கூட அப்பரீட்சைக்குத் தோற்றியிராத அத்தகைய நிலைமைகளில் அதனைப் பரீட்சைக்குத் தோற்றியதாகக் கருத்திற்கொள்ள வேண்டும்.

இதற்கு முன்னர் பரீட்சைக்குத் தோற்றிய அலுவலர்கள் பின்வரும் விதத்தில் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்த வேண்டும்.

இலங்கை நிர்வாக சேவையின், இலங்கை கணக்காளர் சேவையின் மற்றும் இலங்கை திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை ஒரு பரீட்சை என்றும், இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை இன்னொரு பரீட்சை என்றும் கருதி பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினை பரீட்சைக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். இலங்கைப் பொறியியல் சேவையின், இலங்கை விஞ்ஞான சேவையின் மற்றும் இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் ஒரு பாடத்தினைவிட மேலதிகமாக விண்ணப்பிப்பதாயின் 1,000 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும். ஒரு பாடத்துக்கு மாத்திரம் தோற்றுவதாயின் 500 ரூபாவினைப் பரீட்சைக் கட்டணமாகச் செலுத்துதல் வேண்டும்.

பரீட்சைக் கட்டணத்தை இலங்கை நாடு முழுவதிலுமுள்ள ஏதேனுமொரு அஞ்சல் அலுவலகத்தின் மூலம் (உப அஞ்சல் அலுவலகங்கள் நீங்கலாக) "SLIDA" கணக்கிற்கு பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் வழங்கப்பட்ட பற்றுச் சீட்டின் இலக்கம், விண்ணப்பத்தின் உரிய கூட்டில் குறிப்பிடப்படல் வேண்டும். "SLIDA" கணக்கிற்கு பணத்தினைச் செலுத்துவதற்காக உள்நாட்டுத் தந்திக் காசுக் கட்டளை விண்ணப்பத்தினை (மாதிரி 85) நிரப்பும்போது "SLIDA" என்பது பெறுநராகக் குறிப்பிடப்பட வேண்டும். அதேவேளை உரிய பரீட்சையின் குறியீட்டுப் பெயரானது பெறுநரின் முகவரிக்கான இடத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். (பிரிவு 2 இல் குறிப்பிடப்பட்டவாறு குறியீட்டுப் பெயர்கள் அமைதல் வேண்டும்.)

மேலும் கணக்கிற்கு பணத்தினை வரவு வைக்கும்போது அனுப்புபவராக விண்ணப்பதாரியின் பெயரினையும் அனுப்புபவரின் முகவரிக்கான இடத்தில் விண்ணப்பதாரியின் தே. அ. அ. (NIC) இலக்கத்தையும் உள்ளடக்கி விண்ணப்பமானது நிரப்பப்படுதல் வேண்டும்.

**7. இலங்கை நிர்வாக சேவை, இலங்கைப் பொறியியல் சேவை, இலங்கை விஞ்ஞான சேவை, இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கான பரீட்சை மற்றும் இலங்கை நிர்வாக சேவை, இலங்கைக் கணக்காளர் சேவை மற்றும் இலங்கைத் திட்டமிடல் சேவையின் இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளுதல்.**

இணையத்தில் நிகழ்நிலையில் (Online) நிரப்பப்பட்ட விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும்போது பரீட்சார்த்திகளுக்கு உறுதிப்படுத்தல் இலக்கம் (Confirmation Number) ஒன்று வழங்கப்படும் என்பதுடன் பரீட்சார்த்தி பின்னர் எழும் விசாரணைகளுக்காக அதனை வைத்திருத்தல் வேண்டும். உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பமானது இணையத்தின் நிகழ்நிலை முறையினூடாக (Online) அனுப்பப்பட்டவுடன் பரீட்சார்த்திகள் அணுகுவழியினைக் கொண்டிருக்கும் இணையப் பக்கத்தில் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் அவர்கள் தமது பரீட்சை அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். பரீட்சார்த்தி அனுமதி அட்டையின் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றினைப் பெறல் வேண்டும் என்பதுடன் உரிய திணைக்களத் தலைவரினால் அல்லது அந்த நோக்கத்திற்காக தலைவரினால் அங்கீகரிக்கப்பட்ட பிரதி அலுவலரினால் தனது கையொப்பத்தினைச் சான்றுப்படுத்திக்கொள்ள வேண்டும். அவ்விதத்தில் சான்றுறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு உறுதிப்படுத்திய அனுமதி அட்டையின்

பிரதியொன்றைப் பரீட்சார்த்தியின் பிரத்தியேகக் கோவையில் இணைத்துக்கொள்ளும் நோக்கத்திற்காக திணைக்களத் தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**குறிப்பு**.- இணையத்தின் நிகழ்நிலையினூடாக (Online) விண்ணப்பத்தினை நிரப்பும்போது தனிப்பட்ட முகவரி, பணியாற்றும் நிறுவனம் மற்றும் அலுவலக முகவரி என்பன தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும்.

8. விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான செய்முறை தொடர்பிலான ஏதேனும் தெளிவூட்டல் தேவைப்படின் இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு 2018.04.06 ஆந் திகதி முதல் 2018.04.23 ஆந் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு. ப. 8.30 மணியிலிருந்து பி. ப. 4.30 மணிவரை இந்த இணைப்பின் ஊடாக தொடர்பாடல் மேற்கொள்ளப்பட முடியும்.

9. அனுமதி அட்டைகளைக் கொண்டிருக்கும் அலுவலர்களுக்கு அவர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு ஏதுவாக கடமை விடுமுறையினைத் திணைக்களத் தலைவர் வழங்குதல் வேண்டும். அவர்களின் பரீட்சார்த்தித் தன்மையினை உறுதிப்படுத்த வேண்டுமாயின் 011-5980236 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக இதனைச் செய்துகொள்ள முடியும். பரீட்சைக்குத் தோற்றுவதற்காக பரீட்சார்த்திகளுக்கு போக்குவரத்துச் செலவினங்கள் வழங்கப்பட மாட்டாது.

10. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் தமது ஆளடையாளத்தினை நிரூபிக்க வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றினை பரீட்சை மேற்பார்வையாளரிடம் முன்வைத்தல் வேண்டும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு

மேற்படி ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்தியொருவரின் பரீட்சார்த்த உரிமை இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகப் பணிப்பாளர் நாயகத்தின் தற்றுணிபின்படி இரத்துச்செய்யப்படலாம்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் இப்பரீட்சை நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்தியொருவர் தனக்கு உரித்துடையதற்ற மொழிமூலத்தில் பரீட்சைக்குத் தோற்றியுள்ளதாக தெரியவருமாயின் அத்தகைய விண்ணப்பதாரியின் பரீட்சார்த்த உரிமை இரத்துச்செய்யப்படும். விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பரீட்சார்த்தி அனுமதிக்கப்பட மாட்டார்.

12. **பரீட்சை நடைமுறை**.- ஒவ்வொரு வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான காலப்பகுதி மூன்று (3) மணித்தியாலங்களாகும். வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்துவதற்குப் பரீட்சார்த்தி ஒருவர் ஒவ்வொரு பாடத்திற்கும் குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் :-

12.1 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் "எ" வின் இணைப்பு ).

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை நிர்வாக சேவை அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|---|
| 1 | சட்டம் | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01 - I |
| | | இலங்கையின் சட்டமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 01 - II |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 3 மணித்தியாலங்கள் | 01 - III |
| 2 | நிர்வாகம் | | 3 மணித்தியாலங்கள் | 02 - I |
| 3 | பொருளியல் மற்றும் சமூகவியல் | | 3 மணித்தியாலங்கள் | 03 |
| 4 | அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு வழங்கல் செயற்பாடும் | | 3 மணித்தியாலங்கள் | 04 |

*12.1.1* **சட்டம்** :

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட மூன்று வினாப் பத்திரங்கள் :

***முதலாவது (I) வினாப்பத்திரம்.- அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் (பாட இலக்கம் 01- I) - (100 புள்ளிகள்) :***

(i) வரலாற்று ரீதியிலான அபிவிருத்தி உள்ளிட்ட இலங்கை அரசியலமைப்பின் கட்டமைப்பு மற்றும் 1978 ஆம் ஆண்டின் குடியரசு அரசியலமைப்பு

(ii) நிறைவேற்றுத்துறை, குடியரசின் சனாதிபதி, பிரதம அமைச்சர், அமைச்சரவை மற்றும் அரசாங்க சேவை

(iii) நீதி நிர்வாகம்

(iv) நிர்வாகத்துடன் தொடர்பான நீதித்துறைக் கட்டுப்பாடு

(v) அரசாங்க கொள்கைகளுக்கான வழிகாட்டிக் கொள்கைகளும் அடிப்படைக் கடமைகளும்

(vi) கையளியதிகார வழிச்சட்டம்

(vii) அரசாங்கத்தினதும் அரச அதிகார சபைகளினதும் பொறுப்புக்கள்

(viii) அடிப்படை உரிமைகள்

**இரண்டாவது *(II)* வினாப்பத்திரம்.- இலங்கையில் சட்ட முறைகள் (பாட இலக்கம் *01*-II) - *(100 புள்ளிகள்)* :**

(i) நீதி நிர்வாகம்

(ii) இலங்கையின் சட்ட வரலாறு

(iii) நீதிமன்ற அமைப்பு

(iv) இலங்கை நீதிமன்ற கட்டளைச் சட்டம் (6 ஆவது அத்தியாயம்)

(v) 1971 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க நீதி நிர்வாகச் சட்டம்

**மூன்றாவது (III) வினாப்பத்திரம்.- குற்றவியல் சட்டமும் சான்றுச் சட்டமும் (பாட இலக்கம் *01*-III) - *(100 புள்ளிகள்)* :**

(i) தண்டனைச் சட்டக்கோவை
(ii) சான்றுக் கட்டளைச் சட்டம்

பரீட்சார்த்தியொருவர் சட்டம் என்ற பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு சகல வினாப்பத்திரங்களிலும் ஆகக்குறைந்தது 35 புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகளில் சராசரியாக 40% இனையும் பெறுதல் வேண்டும்.

***12.1.2* நிர்வாகம் *(பாட இலக்கம் 02 - I) - (100 புள்ளிகள்).-***

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :

(i) அலுவலக, வெளிக்கள பணிகளை ஏற்பாடு செய்தலும் அமைப்பாண்மை முறைகளும்.

(ii) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள் :

I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII (அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கை முறை விதிகள்)

**12.1.3 பொருளியல் மற்றும் சமூகவியல் (பாட இலக்கம் 03) - (100 புள்ளிகள்).-**

இவ்வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கும். முதலாவது (I) பகுதி வினாப்பத்திரம் - பொருளியல்

(i) பெறுமானம், உற்பத்தி மற்றும் விநியோக கொள்கைகளின்பால் விசேட கவனம் செலுத்திய பொருளாதாரக் கோட்பாடுகள் ;

(ii) நிதி, உற்பத்தி மற்றும் விநியோகம் ;

(iii) இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு தொடர்பான அவதானம் மற்றும் இலங்கையின் பொருளாதாரப் பின்னணி மற்றும் பொருளாதார அபிவிருத்தி தொடர்பான கொள்கைகள், தந்திரோபாயங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள்.

இரண்டாவது (II) பகுதி சமூகவியல் :

(i) சமூகக் கட்டமைப்பின் அமைப்பாண்மையும் பணிகளும் ;

(ii) மானிட உறவுகளும் தொகுமங்களும் ;

(iii) உறவு முறை, திருமணம் மற்றும் குடும்பம் ;

(iv) கிராமிய மற்றும் நகர்ப்புறச் சமூகம் ;

(v) சமூக நிலைகளும் ஏற்றத்தாழ்வுகளும் ;

(vi) சமூகக் கட்டுப்பாடு ;

(vii) கலாச்சாரம், சமயம், ஒழுக்கம் மற்றும் விழுமியங்கள் ;

பொருளியல் மற்றும் சமூகவியல் பாடத்தினைச் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு பகுதிக்கும் ஆகக்குறைந்தது இருபது (20) புள்ளிகளைப் பரீட்சார்த்தி ஒருவர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**12.1.4 அரச துறை நிதி முகாமைத்துவம் மற்றும் கொள்வனவு வழங்கல் செயற்பாடும் - (பாட இலக்கம் 04) - (100 புள்ளிகள்).-**

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) இலங்கையில் நிதிக் கட்டுப்பாடு-

* அரசாங்க நிதி முகாமைத்துவத்திற்கு ஏற்புடைய அரசியலமைப்பு ரீதியான ஏற்பாடுகள் ;
* அரசாங்க நிதி குறித்த பாராளுமன்றக் கட்டுப்பாடு ;
* நிதியம் என்பதன் கருத்து ;
* திரட்டிய நிதியமும் அதன் செயற்பாடும் ;
* ஒதுக்கீட்டின் நோக்கங்களும் ஒதுக்கீட்டு முறைமைகளும் ;
* எதிர்பாரா நிகழ்வுகளுக்கான நிதியம் ;
* பிற நிதிகளும் அவற்றின் தொழிற்பாடுகளும் ;
* அரசாங்க வருமானம் ;
* நிதி அமைச்சரின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும் ;
* திறைசேரியின் அதிகாரங்களும் கடமைப் பொறுப்புக்களும் ;
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம் ;
* கணக்காய்வாளர் தலைமை அதிபதி, அவரின் அதிகாரங்களும் கடமைப் பொறுப் புக்களும் ;

* அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (COPA) ;
* அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழு (COPE);

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், பிரதம கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானக் கணக்கீட்டு அலுவலர்களின் நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் கடமைப் பொறுப்புக்கள்/ வகைகூறல் மற்றும் பொறுப்புக்கூறலின் தன்மை ;

(iii) உள்ளகக் கணக்காய்வு:

(iv) அரசாங்க செலவுகளைத் திட்டமிடலும் முகாமைத்துவம் செய்தலும்-

* அமைப்புக்களின் நோக்கங்களையும் கடமைப் பொறுப்புக்களையும் இனங்காணல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், குறி இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல்
* அபிவிருத்திக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதலும் மதிப்பீட்டு முன்னுரிமை வழங்கலும்
* ஆண்டு வருவாய் மற்றும் செலவின மதிப்பீடுகளைத் தயாரித்தலும் இறுதி முடிவெடுத் தலும்.

(v) அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடுகளில் மாற்றங்களைச் செய்தல்-

* வீரமொங் நடவடிக்கை முறையைச் செயற்படுத்துதல்
* அரச துறையின் பதவியணிகள் மற்றும் சம்பள முகாமைத்துவம்
* மொத்தக் கிரய மதிப்பீடுகளும் அவற்றை மீளமைத்தலும்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் கைவிடல்களும்

(vii) பல்வேறு கணக்குச் செலவுகள்

(viii) நிதி முகாமைக்கான பணிகளைப் பொறுப்பளித்தல்

(ix) அரச நிதியின் பொறுப்பும் வங்கிக் கணக்கு நடைமுறையும்

(x) அரசாங்க கொள்வனவு - வழங்கல் நடைமுறை

* அரசாங்கக் கொள்வனவு - வழங்கல் பணிக்கோவை
* அரசாங்க கொள்வனவு - வழங்கல் வழிகாட்டல் கோவை

12.2 இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (2013.11.11 ஆந் திகதிய 1836/ 6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைப் பொறியியல் சேவைப் பிரமாணக் குறிப்பின் அட்டவணை "iii")

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்தி செய்யாத இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் பாடங்கள் கீழ்வருமாறு :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02- II |
| 2 | நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 05- I |
| 3 | திணைக்கள/தாபன முறைமைகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப்படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ்வறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. | |

ஒவ்வொரு பாடத்தினையும் சித்தியெய்துவதற்கு குறைந்தது நாற்பது (40) புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**12.2.1 நிர்வாகம் - (பாட இலக்கம் 02-II) - (100 புள்ளிகள்).**- 1985 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி I மற்றும் 1999 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தாபன விதிக்கோவையின் தொகுதி II இலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாடுகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்.

**12.2.2 நிதி முறைகள் - (பாட இலக்கம் 05-I) - (100 புள்ளிகள்).**- அத்தியாயம் IX மற்றும் X தவிர 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நிதிப் பிரமாணங்களிலுள்ள சகல அத்தியாயங்களும் மற்றும் தேசிய பெறுகை வழிகாட்டலுக்கான தகுதிவிதிகள் (உரிய காலத் திருத்தங்களுக்கு உட்பட்டு) என்பவற்றின் அடிப்படையில் பொறியியல் சேவைத் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் தொடர்பில் தயாரிக்கப்படும் ஒரு வினாப்பத்திரம்.

12.3 இலங்கை விஞ்ஞான சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/27 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை விஞ்ஞான சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4) மற்றும்

இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (2014.08.28 ஆந் திகதிய 1877/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை கட்டடக் கலைஞர் சேவைப் பிரமாணக் குறிப்பின் பின்னிணைப்பு 4).

இப்பரீட்சைகளுக்கான பாடங்கள் பின்வருமாறு காணப்படுகின்றது :

| பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|
| நிதி முறைமைகள் | 3 மணித்தியாலங்கள் | 05 - II |
| நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02 - III |
| திணைக்கள ஒழுங்குவிதிகள் | இப்பரீட்சை நிறுவனத் தலைவரினால் நடாத்தப்படுவதனால் இது குறித்த விபரங்கள் இவ்வறிவித்தலில் பிரசுரிக்கப்படவில்லை. | |

**12.3.1 நிதி முறைமைகள்.- (பாட இலக்கம் 05-II) - (100 புள்ளிகள்).-**

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) இலங்கையில் நிதிக் கட்டுப்பாடு-

* அரச நிதி முகாமைத்துவம் தொடர்புபட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகள்
* அரச நிதி மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு
* நிதியம் என்பதன் கருத்து
* திரட்டு நிதியமும் அதன் தொழிற்பாடும்
* ஒதுக்கீட்டின் குறிக்கோளும் முறைகளும்
* எதிர்பாராச் செலவு நிதியம்
* ஏனைய நிதியங்களும் அவற்றின் தொழிற்பாடும்
* அரசிறை
* நிதி அமைச்சரின் அதிகாரங்களும் வகிபங்குகளும்
* திறைசேரியின் அதிகாரங்களும், வகிபங்குகளும்
* ஆணைச்சீட்டுக்கள் மற்றும் கட்டுநிதி அதிகாரம்
* கணக்காய்வாளர் நாயகமும் அவரின் அதிகாரங்களும் வகிபங்குகளும்
* அரச கணக்குக் குழு (COPA)
* அரச தொழில் முயற்சிக்குழு (COPE)

(ii) கணக்கீட்டு அலுவலர்கள், பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் அரசாங்க வருமானக் கணக்கீட்டு அலுவலர்களின் நியமனங்கள், அவ் அலுவலர்களின் அதிகாரங்கள் மற்றும் வகிபங்குகள்/பொறுப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தன்மை.

(iii) உள்ளகக் கணக்காய்வு

(iv) அரசாங்க செலவினங்களைத் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்-

* அமைப்புக்களின் நோக்கங்கள் மற்றும் தொழிற்பாடுகளை இனங்காணல்
* அரசாங்கக் கொள்கைகள், குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை இனங்காணல்
* அபிவிருத்திச் செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களைத் திட்டமிடுதலும் மதிப்பிடுதலும் மற்றும் அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்தலும்
* வருடாந்த வருமானம் மற்றும் செலவுகளின் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் இறுதித் தீர்மானம் எடுத்தல்

(v) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் மாற்றங்களை மேற்கொள்ளல்-

* வீரமன் நடைமுறையினை அமுல்படுத்துதல்
* அரச துறையின் பதவியணி மற்றும் சம்பள முகாமைத்துவம்
* மொத்தச் செலவு மதிப்பீடுகளும் திருத்தங்களும்
* குறைநிரப்பு மதிப்பீடுகள்

(vi) அரச உடைமைகளின் நட்டங்களும் உரிமைக் கைவிடல்களும்

(vii) நானாவித கணக்கீட்டு விடயங்கள்

(viii) நிதி முகாமைத்துவத்திற்கான தொழிற்பாடுகளைக் கையளித்தல்

(ix) அரச நிதியின் கட்டுக்காப்பும் வங்கிக் கணக்குகளின் நடைமுறையும்

(x) அரசாங்க பெறுகைச் செயன்முறை-

* அரசாங்கப் பெறுகை நடைமுறைக் கோவை
* அரசாங்கப் பெறுகை வழிகாட்டல்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.3.2 **நிர்வாகம்.- (பாட இலக்கம் 02-III) - (100 புள்ளிகள்).-**

பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாப்பத்திரம் :-

(i) தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்கள்-

I, II, III, V, VI, VII, IX, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII மற்றும் XLVIII,

(ii) 2009.02.20 ஆந் திகதிய 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.4 இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/ 33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட

இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 3 ஆவது பின்னிணைப்பு)

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1. | அரசாங்க நிதி நடைமுறைகள் | 3 மணித்தியாலங்கள் | 06 |
| 2. | சட்டமும் முகாமையும் | 3 மணித்தியாலங்கள் | 07 |
| 3. | நிர்வாகம் | 3 மணித்தியாலங்கள் | 02-IV |
| 4. | அறிக்கை எழுதுதலும் முகாமைக்குத் தகவல் வழங்குதலும் | 3 மணித்தியாலங்கள் | 08 |

12.4.1 **அரசாங்க நிதி ஒழுங்குவிதிகள் (பாட இலக்கம் 06) - (100 புள்ளிகள்).-** நிதி ஒழுங்குவிதிகளின் பிரயோகம் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், திறைசேரியின் சுற்றறிக்கைகள், வருமானம், செலவினம், வெளிநாட்டு உதவி, வருடாந்த மற்றும் குறைநிரப்பு மதிப்பீடு, அரச படுகடன் வழங்கல், கேள்விப்பத்திரங்கள், கட்டுநிதிகள் மற்றும் முற்பணங்கள், நாட்டின் கணக்கு, தொழிற்பாட்டு மற்றும் பொருளாதார வகுப்பாக்கங்கள், வரவு செலவுத் திட்ட நிகழ்ச்சித் திட்டமும் செயலாற்றுகையும், நிதி அமைச்சரின் பணிகள், பொதுத் திறைசேரி, நிதி அமைச்சு, செயலாளர்கள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் அரச கணக்குகள் குழு தொடர்பான அரச நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் திறைசேரியின் சுற்றறிக்கைப் பயன்படுத்தப்படும் முறைமை தொடர்பாகவும் பரீட்சார்த்திகள் பரிசோதிக்கப்படுவர்.

12.4.2 **சட்டமும் முகாமைத்துவமும் (பாட இலக்கம் - 07) - (100 புள்ளிகள்)**

**சட்டம்** : சட்டத்தின் வரைவிலக்கணம் -

இலங்கையின் சட்ட முறைமைகள்

இலங்கையின் நீதிமன்ற முறைமைகள்

ஒப்பந்தச் சட்டம்

முகவராண்மைச் சட்டம்

பொருட்களின் விற்பனை

வாடகைக் கொள்வனவு

பேரம் பேச்சுவார்த்தை சாதனங்கள்

பிணையங்களின் உத்தரவாதம்

காப்புறுதி

**முகாமைத்துவம் :**

முகாமைக்கான அறிமுகம்

முகாமையாளர்களினது பணிகளும் தேர்ச்சிகளும்

திட்டமிடல் செய்முறையும் மற்றும் அமைப்பு நிலைகளை உருவாக்கல்

அமைப்புக் கட்டமைப்பு

மனித வள முகாமைத்துவம்

செயலாற்றுகை மதிப்பீடு

ஊக்குவிப்பு

உள்நோக்கம்

தலைமைத்துவம்

தொடர்பாடல்

தீர்மானம் எடுத்தல்

பிரச்சினைகளைத் தீர்த்தல்

மாறுபட்ட முகாமைத்துவம்

முகாமைத்துவ முரண்பாடுகள்

முகாமைத்துவக் காலம்

தரச் சுழற்சி, உற்பத்தி மற்றும் விளைவு

முகாமைத்துவ நெறிமுறைகள் மற்றும் பொறுப்புக்கள்

12.4.3 **நிர்வாகம் (பாட இலக்கம் 02-IV) - (100 புள்ளிகள்)**

தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் :

VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII

மற்றும்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதியின் முதலாவது வகுதியின் I தொடக்கம் VI வரையான அத்தியாயங்கள்

12.4.4 **அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல்களை முன்வைத்தல் (பாட இலக்கம் 08) (100 புள்ளிகள்) :**

முகாமைத்துவ தகவல்கள் தொடர்பாக காலத்திற்கேற்ற வகையில் உண்மைத் தன்மை மற்றும் முழுமைத் தன்மையின் முக்கியத்துவம்

கணினிப் பயன்பாட்டின் உதவி

காலாந்தர நிமித்த காரண அறிக்கை

கூட்ட அறிக்கை மற்றும் குறிப்பெடுத்தல்

முகாமைத்துவ அறிக்கைக் கட்டமைப்பு

விசேட கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கிய விளைவுகள்

பயன்பாட்டின் பொருள் விளக்கம்

மாறிகள் தொடர்பாக கருத்து தெரிவித்தல்

தரவுப் பகுப்பாய்வின் புள்ளிவிபரமுறைப் பயன்பாடு

செயலாற்றுகையினை ஒப்பீடு செய்தல்

முகாமைத்துவ அறிக்கைகளில் விகிதங்கள் மற்றும் சதவீதப் பயன்பாடு

கோட்டுச் சித்திரங்கள் மூலம் குறித்துக்காட்டல்

தொழில்சார் உரைகள் மற்றும் விரிவுரைகளுக்கு செவிமடுத்தல்

விடயம்சார் குழுக்களின் கலந்துரையாடல்

பேரவையின் திறமைகள்

உரைகளை நடாத்துதல்

**குறிப்பு.- சித்தியெய்துவதற்காக விண்ணப்பதாரிகள் சகல வினாப்பத்திரங்களிலும் 40% ஆன புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.**

12.5 இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய மற்றும் 1670/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பின் "இ" பின்னிணைப்பு)

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை திட்டமிடல் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | திட்டமிடல் எண்ணக்கருக்கள் மற்றும் செயல்முறையியல், திட்டமிடல் நிறுவனங்கள் | 03 மணித்தியாலங்கள் | 09 |
| 2 | பொருளாதார பகுப்பாய்வு மற்றும் புள்ளிவிபரம் | 03 மணித்தியாலங்கள் | 10 |
| 3 | செயற்திட்டத் திட்டமிடல், அமுல்நடாத்துதல், தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு. | 03 மணித்தியாலங்கள் | 11 |
| 4 | நிறுவன ரீதியான ஒழுங்குவிதிகள் மற்றும் அரசதுறை நிதியியல் முறைமைகள் | 03 மணித்தியாலங்கள் | 12 |
| 5 | ஆங்கில மொழி | 03 மணித்தியாலங்கள் | 13 |

12.5.1 சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் நியமனக் கடிதத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் குறித்த கால எல்லையினுள் அல்லது அதற்கு முன்னர் பரீட்சையினை சித்தியெய்தியிருத்தல் வேண்டும் என்பதோடு, சகல பாடங்களிலும் ஒரே தடவையில் அல்லது வேறு வேறாக பல தடவைகளில் தோற்றுவதற்கு அலுவலரொருவருக்கு அனுமதி உண்டு.

**பரீட்சை நடைமுறைகள் :**

12.5.2 **திட்டமிடல் எண்ணக் கருக்கள், செயல்முறையியல் மற்றும் திட்டமிடல் நிறுவனங்கள் (பாட இலக்கம் 09) - (100 புள்ளிகள்) :**

(i) தேசிய குறிக்கோள்கள் மற்றும் முன்னுரிமைகள் மற்றும் அவைகளை அடைவதற்கான கொள்கை கட்டமைப்பும் நிகழ்ச்சித் திட்டங்களும் ;

(ii) தேசிய திட்டமிடலுக்கான செயல்முறையியல், திட்டமிடலிலுள்ள பாரிய சிக்கல் கொண்ட விடயங்கள், பொது மக்கள் பங்கேற்பு மற்றும் வளங்களைப் பயன்படுத்தல் போன்றவை ;

(iii) தேசிய திட்டமிடலுக்கான தன்மையும் மூலங்களும், தரவுச் சேகரிப்பு, பொருட்கோடல், பகுப்பாய்வு, வெளிக்கள மேற்பார்வை மற்றும் விசாரணை குடித்தொகைப் பரம்பல் தொடர்பான எண்ணக்கருக்கள், பொருளியல் முற்கணிப்பு மற்றும் கொள்கைப் பகுப்பாய்வு ஆகியன.

12.5.3 **பொருளாதார பகுப்பாய்வும் புள்ளிவிபரங்களும் (பாட இலக்கம் 10) - (100 புள்ளிகள்) :**

(i) உற்பத்தி மற்றும் விநியோகித்தல் கோட்பாட்டிற்கு விசேட முக்கியத்துவத்துடன் கூடிய பொருளாதாரக் கொள்கைகள் ;

(ii) பணம், வங்கி முறைமைகள், பன்னாட்டு நிதியிடல் முறைமைகள் மற்றும் வியாபாரம் ;

(iii) நாணயப் பகுப்பாய்வு, நிதி வர்த்தகம் மற்றும் வரிக் கொள்கைப் பகுப்பாய்வு ;

(iv) இலங்கையின் பொருளாதாரக் கட்டமைப்பு ;

(v) பொருளாதாரத்தின் மீளாய்வு ;

(vi) தொழில்நுட்ப ரீதியான செயல்திறனுடைய மற்றும் செயல்திறனற்ற மனிதவலு மற்றும் வெளிநாட்டு உதவிகள் உட்பட ஏனைய சொத்துக்களை மதிப்பீடு செய்தல் மற்றும் அவற்றின் பயன்பாடு ;

(vii) பொருளாதார மற்றும் சமூக நிகழ்வுகள் ;

(viii) பொருளாதாரப் பகுப்பாய்வு மற்றும் திட்டமிடலின்போது உபயோகப்படுத்தும் அடிப்படை புள்ளிவிபர எண்ணக்கருத்துக்களும் மற்றும் முறைமைகளும் ;

(ix) பயன்பெறுதல்/செலவுப் பகுப்பாய்வு ஆகியனவற்றின் கோட்பாடுகள்.

12.5.4 **செயற்திட்ட திட்டமிடல், அமுல்நடாத்தல், மேற்பார்வை தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு செய்தல் (பாட இலக்கம் 11) - (100 புள்ளிகள்)** :

(i) செயற்திட்ட திட்டமிடல்களை மேற்கொள்ளல், இனங்காணல், வரையறுத்தல் மற்றும் செயற்திட்டங்களைத் தயாரித்தல், கொள்கைகள், கோட்பாடுகள், அமைவிடங்களைத் தெரிவுசெய்தல், தொழில்நுட்பம், செலவு மற்றும் நன்மைகளை மதிப்பீடு செய்தல், தொழில்நுட்ப நிதியியல் மற்றும் பொருளாதார பகுப்பாய்வு ஆகியன.

(ii) செயற்திட்டங்களைச் செயற்படுத்துதல், வழிநடாத்துதல்/ கண்காணித்தல், செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை முறையாகவும் சரியான நேரத்திலும் நிறைவேற்றல், விபரமான செயற்பாட்டுத் திட்டங்களையும் அமுல்நடாத்தும் அட்டவணைகளையும் தயாரித்தல், தொடர் நடவடிக்கைளையும் முன்னேற்றக் கட்டுப்படுத்தல்களையும் ஒருங்கிணைத்தல் மற்றும் பின்னூட்டல் நடவடிக்கை எடுத்தல் ;

(iii) செயற்திட்டங்களை மதிப்பீடு செய்தல், செயற்திட்டங்களினதும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் ஒட்டுமொத்தத்தினை மதிப்பீடு செய்தல் மற்றும் செலவிற்கு ஒப்பீடாக பயன்களைப் பகுப்பாய்வு செய்தல்.

12.5.5 **நிறுவன ஒழுங்குவிதிகளும் அரச துறையின் நிதியியல் முறைமைகளும் (பாட இலக்கம் - 12) - (100 புள்ளிகள்)** :

(i) அரசாங்க நிதியியல் ஒழுங்குவிதிகள் 1 ஆவது தொகுதி (X ஆவது அத்தியாயம் தவிர்ந்த).

(ii) தாபன விதிக்கோவையின் அத்தியாயங்கள் - VII, IX, XI, XII, XV, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் விதிமுறை மற்றும் சட்டங்களின் அத்தியாயங்கள் I தொடக்கம் VI வரையும்.

(iii) இலங்கையின் நிதி நிர்வாகம்.- அரச நிதி முகாமைத்துவம் தொடர்பான இலங்கை நியதிச்சட்ட ஏற்பாடுகளின் நிதியிடல் கட்டுப்பாடு, அரச நிதி திரட்டிய நிதியம் மற்றும் அதனது செயற்பாட்டின் மீதான பாராளுமன்றக் கட்டுப்பாடு, ஒதுக்கீட்டுக் கணக்கின் குறிக்கோளும் ஒதுக்கீட்டு முறைமையும், அரசாங்க வருமானம், நிதி அமைச்சரின் அதிகாரமும் வகிபங்கும், திறைசேரியின் அதிகாரங்களும் வகிபங்கும், ஆணைச்சீட்டுக்கள் மற்றும் அதிகாரம்பெற்ற கட்டுநிதி அதிகாரம், கணக்காய்வாளர் நாயகமும் அவரின் அதிகாரங்கள் மற்றும் வகிபங்கு, அரச செலவின செயற்குழு, பொது முயற்சிகள் செயற்குழு ;

(iv) கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் வருமான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோரின் நியமனங்களும் அதிகாரங்களும் வகிபங்கும் ;

(v) அரச செலவின் திட்டமிடலும் முகாமைத்துவமும், அமைப்புக்களின் குறிக்கோள்களையும் வகிபங்குகளையும் இனங்காணல், வருடாந்த வருமானங்களையும் மதிப்பீடுகளையும் தயாரித்தல் மற்றும் இறுதித் தீர்மானங்களை எடுத்தல், அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தில் மாற்றங்களை மேற்கொள்ளல், வீரமொங் வழிமுறையினை செயற்படுத்துதல், அரச துறை பதவி அணியின் முகாமைத்துவம், அரச குறைநிரப்பு மதிப்பீடு ;

(vi) அரச பெறுகை வழிமுறை.- பொருட்கள் சேவைகள் மற்றும் வேலை ஆகியனவற்றைப் பெறுதல், கேள்விப்பத்திர குழுக்களையும் தொழில்நுட்ப மதிப்பீட்டு செயற்குழுக்களின் நியமனங்கள், அதிகாரங்கள் மற்றும் வகிபங்குகள், கேள்விப்பத்திர மதிப்பீட்டு வழிமுறைகள், வெளிநாட்டு நிதியுதவியினால் மேற்கொள்ளப்படும் கருத்திட்டங்களின் முகாமைத்துவம் ;

12.5.6 **ஆங்கில மொழி (பாட இலக்கம் 13) - (100 புள்ளிகள்)**.- திட்டமிடல், அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவம் என்பவை தொடர்பான விண்ணப்பதாரியின் கல்வி மற்றும் தொழிற்றுறை தொடர்பான ஆங்கில மொழித் திறமையை அளவிடுவதற்காக ஆங்கிலம் தொடர்பான எழுத்துப் பரீட்சையொன்று நடாத்தப்படும்.

**12.6 இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (2013.12.23 ஆந் திகதிய 1842/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் பிரமாணக் குறிப்பின் 'ஏ' இன் இணைப்பு)**

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமையினைப் பெறுகின்றார்கள்.

இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை பின்வரும் பாடங்களைக் கொண்டிருக்கும் :-

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 14 |
| 2 | அபிவிருத்தி நிருவாகச் செயற்பாடுகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 3 மணித்தியாலங்கள் | 15 |
| 3 | முகாமைத்துவத்துக்கான தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பப் பாவனை | 3 மணித்தியாலங்கள் | 16 |
| 4 | இணைப்பு (ஆங்கில) மொழித் தேர்ச்சி | 3 மணித்தியாலங்கள் | 17 |

12.6.1 **பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்).- (பாட இலக்கம் 14) - (100 புள்ளிகள்).-** இலங்கையின் அண்மைக்கால பொருளாதார, சமூக மற்றும் அரசியல் வரலாற்றில் பொருளியல் மற்றும் சமூகவியல் கோட்பாடுகளைப் பிரயோகித்து பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை வகுத்தலில் தாக்கமேற்படுத்தும் விடயங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.6.2 **அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடு (இலங்கை மீது முக்கிய கவனத்துடன்).- (பாட இலக்கம் 15) - (100 புள்ளிகள்).-** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்பால் விசேட கவனம் செலுத்தி அபிவிருத்தி நிர்வாகத்திற்குப் பொறுப்பான நிறுவனங்கள், அவற்றின் இயக்கம் மற்றும் அவற்றிற்கிடையிலான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாளாகும் :-

(i) இலங்கையின் அரசாங்க அமைப்பு

(ii) இலங்கை அரசாங்க அமைப்பின் அரசியலமைப்புப் பின்னணி

(iii) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை நிறுவனங்கள்
(iv) மக்கள் அமைப்புக்கள்
(v) அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.6.3 **முகாமைத்துவத்திற்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை - (பாட இலக்கம் 16) - (100 புள்ளிகள்).-** கீழே குறிப்பிட்ட விடயத்துறைகள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவினைப் பரிசோதித்துப் பார்க்கின்ற இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்தினால் நடாத்தப்படும் பிரயோகப் பரீட்சையாகும் :-

(i) அரச நிறுவனங்களுக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனையின் முக்கியத்துவம்

(ii) தரவுப் பகுப்பாய்வு மற்றும் அறிக்கை தயாரித்தல்

(iii) தரவுத்தள முகாமைத்துவம் மற்றும் தரவுகளை மீளப்பெறல்

(iv) கருத்திட்ட முகாமைத்துவத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை

(v) முகாமைத்துவ தகவல் முறைமையைத் தயாரித்தல்.

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

**12.6.4 இணைப்பு (ஆங்கில) மொழித் தேர்ச்சி (பாட இலக்கம் 17) - (100 புள்ளிகள்) :-**

Scheme of Evaluation : Written Examination

Content : The following subjects area are suggested for the candidates' reference.

* Communication Skills

The candidate should possess the ability to function effectively in the following language functions:-

- General Greetings and Introductions
- Giving and Getting Information
- Advising[11], Suggesting and Expressing Opinions
- Describing Events and Situations
- Telephone skills
- Interviewing skills
- Expression Skills
- Listening and Note taking skills

* Writing Skills
The knowledge on the modern formats and styles of writing is tested in this area of study :

- Internal modes of Communication
- Formal Correspondence skills
- Writing Descriptions/Explanations
- Grammar
- Summary writing skills
- Report Writing skills
- Meeting Minutes/Agendas/Invitations

* Comprehension Skills
Candidate's ability to comprehend a printed text, infer meaning and verbal/written interpretation is expected :

- Reading and understanding the specific and general meaning of a printed text
- Reading and Interpretation (verbal/written)
- Understanding the cohesion and coherence of a passage

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

**12.7 இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/ 33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைக் கணக்காளர் சேவைப் பிரமாணக் குறிப்பின் 4 ஆவது பின்னிணைப்பு)**

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய தகைமையினைப் பெறுகின்றார்கள்.

இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது :

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | முகாமைக் கணக்கீடு | 3 மணித்தியாலங்கள் | 18 |
| 2 | அரசாங்க பொது நிதி முகாமை | 3 மணித்தியாலங்கள் | 19 |
| 3 | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு | 3 மணித்தியாலங்கள் | 20 |

*12.7.1* ***முகாமைக் கணக்கீடு (பாட இலக்கம் – 18) – 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும் (100 புள்ளிகள்) :-***

*வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.*

*கணக்கீட்டில் கட்டுப்பாட்டுக் கோட்பாடு பின்னூட்டல், திறந்ததும் மற்றும் மூடியதும், அடிப்படை மற்றும் பிரயோகத்திற்கு உகந்த, நிலையான செலவு முறைகள், செயல்திறன் தரங்கள் மற்றும் மதிப்பீட்டு நியமங்கள் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் அவற்றினை ஈடுபடுத்தும் பிரயோக முறைகள், தரத் திருத்தங்கள், கற்றல் வளைவு மற்றும் உள்நோக்கத்தினைத் தீர்மானித்தல், ஆய்வு முரண்களையும் உப முரண்களையும் பகுத்தல், அவற்றின் முக்கியத்துவம், முன்வைத்தல் மற்றும் விசாரணை செய்தல், கட்டுப்பாட்டு கணக்கீட்டு சார் தொழிற்படு வகைகள், வரவுசெலவுத்திட்ட தயாரிப்பிற்கான எண்ணக்கரு, வரவுசெலவுத் திட்டக் கட்டுப்பாடு தொடர்பான நிர்வாகம், வரவுசெலவுத் திட்டக் குறியீடு, நிலையான மற்றும் வளைதகு பாதீடு, பிரதான மற்றும் இடைக்கால பாதீட்டு ஆவணம், பாதீட்டு மையம், வரவுசெலவுத் திட்டத்தினைத் தயார்படுத்தலில் முகாமையின் கலந்துகொள்ளல், தலையிடுதல் மற்றும் உள்நோக்கம், பாதீட்டுக் காலமும் பிரதான பாதீட்டுக் காரணிகளை இனங்காணலும்.*

***குறிப்பு.**– இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*12.7.2* ***அரசாங்க பொது நிதி முகாமை (பாட இலக்கம் – 19) – 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும் – (100 புள்ளிகள்)***

*வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.*

***அரசாங்க கணக்காளரின் பங்கு :***

*அரசாங்க நிதி தொடர்பான அரசியலமைப்பு மற்றும் சட்டவமைப்பு நிர்வாகவமைப்பு, மத்திய அரசாங்கம், அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், கூட்டுறவு வியாபாரம் என்பன பற்றிய அறிவு.*

*பாராளுமன்றத்தின் கட்டுப்பாடு, பொதுத் திறைசேரியின் கடமைகள், திட்டமிடல் அமைச்சு, மதிப்பீட்டுச் செயற்குழு, கணக்காய்வாளர், அரசாங்க கணக்குக் குழு, திரட்டிய நிதியம், பாராளுமன்றக் கட்டுப்பாட்டின் பிரச்சினைகள்.*

*நிதிச் சுழற்சி, திட்டமிடலுக்கான நிகழ்ச்சித் திட்டத்தினைத் தயாரித்தல், வரவு செலவுத் திட்டத்தினைத் தயாரித்தல், நிதியியலினை அங்கீகரித்தல், கணக்கிடுதல் நடவடிக்கை, மதிப்பீடு மற்றும் கணக்காய்வு.*

*செயற்திட்டங்களை மதிப்பீடு செய்தல், சேவை கேள்வி மனு மற்றும் எண் ரீதியான தரவுப் பயன்பாடு, கொடுப்பனவு கோட்பாடுகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பெறுமானத்தினைத் தீர்மானித்தல்.*

*செலவுப் பயன் பகுப்பாய்வு, தள்ளுபடி செய்யப்பட்ட பணப் பகுப்பாய்வு, உள்நாட்டு உற்பத்தி விகிதம், நடைமுறையியல் செயற்திட்டங்கள், செயற்திட்டங்கள் தயாரித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் தொடர்பான பொருளாதார நிதியியல் மற்றும் முகாமைத்துவப் பிரிவு, வெற்றிகரமாக செயற்திட்டங்களை முன்வைத்தல்.*

*நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரிப்பதன் நுட்ப முறை, வலைய பகுப்பாய்வு முறையினைப் பயன்படுத்தல், வளங்கள் உரிமை மாற்றல், போக்குவரத்து தொடர்பான சிக்கல்கள், பயன்பாட்டிற்கு எடுத்தல் மற்றும் காலப்போக்கில் வீழ்ச்சியடையும் சொத்துக்கள் மற்றும் அவ்வாறு வீழ்ச்சியடையாதவை, என்றாலும் குறித்த காலம் பாவனை செய்த அல்லது காலம் கடந்ததன் பின்னர் அல்லது பயனற்றதாக மாறும் சொத்துக்குப் பதிலாக சொத்துக்களை ஈடுபடுத்துதல், செயலாற்றுகை வரவுசெலவுத்திட்ட அறிக்கை, அடிப்படை முறைமை உருவாக்கம் மற்றும் பயன்பாடு, செயலாற்றுகையினை அளவிடுதல், அளவீட்டு வகைகள், அலகுகள் மற்றும் நிர்ணயங்களைத் தேர்ந்தெடுத்தல், அளவீட்டு முறைகள் மற்றும் செயலாற்றுகைப் பகுப்பாய்வு.*

*நிகழ்ச்சித் திட்டப் பாதீடு, நிகழ்ச்சித் திட்டக் கட்டமைப்பு, பணிகள் அடிப்படையில் வகைப்படுத்தல், நிகழ்ச்சித் திட்ட நடவடிக்கைகள், செலவுச் செயற்திட்டங்கள் மற்றும் செலவு விடயங்கள், பொருளாதார மற்றும் செயற்பாட்டு வகைப்படுத்தல்*

*நிதிக் கட்டுப்பாட்டு முறை, பொறுப்பாட்சி, உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிதி ஒழுங்குவிதிகள், உள்ளகக் கணக்காய்வு, வினைத்திறன் கணக்காய்வு, முகாமைத்துவ கணக்காய்வு, மாறிலிப் பகுப்பாய்வு, மூலதன*

பாதீட்டினைத் தயாரித்தல் தொடர்பான தீர்மானம், நீண்டகால முறைமையினைத் தயாரித்தல் மற்றும் அதன் முக்கியத்துவம், முன்நிகழ்ச்சியிடல், சரிநிலை மற்றும் வரையறைகள், இடர் பகுப்பாய்வு, தீர்மான விருட்சம், நிபந்தனைக்குட்பட்ட காரணிகள்.

மூலதனத்திற்கான கேள்வி, மூலதன உற்பத்தி மற்றும் ஊதியத்தினை மதிப்பிடுவதில் பிரச்சினை, செயற்திட்டங்களை முன்னுரிமைப்படுத்த நிபந்தனையிடும்போது நிச்சயமற்றதாக மாறுதல், திருப்பிக்கொடுக்கும் அணிக்கோவை, பயன் விகிதாசாரத்தினைக் கணக்கிடுதல், தேறிய தற்போதைய பெறுமதி மற்றும் தள்ளுபடி செய்யப்பட்ட பணப் பரிமாற்றத்தின் நலன்கள், வரி அறவிடலின் தாக்கம், முதலீட்டுக் கணிப்பு, கருத்திட்டச் செலவுக் கட்டுப்பாடு மற்றும் இறுதிக் கணக்காய்வு.

உட்பிரமாணத் தீர்மானங்கள், உற்பத்திக் கலவை, உற்பத்தி செய்தல் அல்லது கொள்வனவு செய்தல், உற்பத்தி மாற்று முறைகள், தொழிற்சாலைகளை மூடிவிடல் தொடர்பான பிரச்சினைகள், விலையிடல் கொள்கைகள் மற்றும் பங்களிப்புக் கோட்பாடு, நுகர்வோரின் கேள்விப்போக்கின் தாக்கம், தேவையின் மீள் சக்தி, சந்தைப்படுத்தலின் மூல உபாயம், செயலாற்றுகை மதிப்பீட்டு நுட்பமுறை, இலாபத்தன்மை தொடர்பான அணிக்கோவை மற்றும் விகிதாசாரம்.

செலவின் அநுகூலப் பகுப்பாய்வு, நடப்பு மூலதன முகாமைத்துவம்.

அரசாங்க வணிக வியாபாரங்களின் நிதிக் கட்டுப்பாடு, வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு, முகாமைத்துவத்தினை அறிக்கையிடல், கணக்கின் பொருள் விளக்கம் மற்றும் நிதி விகிதாசாரப் பயன்பாடு.

அரசாங்க நிறுவனங்களில் விலையினை நிர்ணயித்தல்

கணக்குத் திட்டத்தினை உள்ளடக்கிய விடயங்கள், அரசாங்க அறிக்கைகள் மற்றும் அரசாங்க வியாபாரங்கள்.

**குறிப்பு.**- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

12.7.3 **முகாமைத்துவம் மற்றும் அமைப்பு (பாட இலக்கம் - 20) - 3 மணித்தியாலங்கள் கொண்ட வினாப்பத்திரமாகும். (100 புள்ளிகள்)**

வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

முகாமைத்துவம் மற்றும் அமைப்புக் கோட்பாடுகள் தொடர்பாக அபேட்சகரின் அறிவு, அரச பிரிவுகளின் பிரச்சினைகள் மற்றும் வினாக்கள் தொடர்பாக இக்கோட்பாடுகளின் பயன்பாட்டினைப் போன்றே நவீன முகாமைத்துவ உத்திகள் மற்றும் நுட்பமுறைகள் பற்றிய அவரின் அறிவினைத் தீர்மானிப்பதற்காக இப்பாடத்துடன் தொடர்புடைய வினாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளது.

**குறிப்பு.**- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

**12.8 இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (2010.09.10 ஆந் திகதிய 1670/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கைத் திட்டமிடல் சேவைப் பிரமாணக் குறிப்பின் "ஈ" பின்னிணைப்பு)**

இதுவரை இப்பரீட்சையினைப் பூர்த்திசெய்யாத இலங்கைத் திட்டமிடல் அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

**12.8.1 இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கான பாடங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது:-**

| தொடர் இலக்கம் | பாடம் | காலம் | பாட இலக்கம் |
|---|---|---|---|
| 1 | அபிவிருத்தித் திட்டமிடலின் நுட்பங்கள் | 3 மணித்தியாலங்கள் | 21 |
| 2 | அடிப்படைப் பேரினப் பொருளியல் | 3 மணித்தியாலங்கள் | 22 |
| 3 | தற்போதைய சர்வதேசப் பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். | 3 மணித்தியாலங்கள் | 23 |

**12.8.2 வினாத்தாளிலுள்ள சகல வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டியது கட்டாயமாகும் பரீட்சை நடைமுறைகள் :**

I. ***அபிவிருத்தித் திட்டமிடலின் நுட்பங்கள் : (பாட இலக்கம் - 21) - (100 புள்ளிகள்)***

(i) ஸ்வொட் (SWOT) ஆய்வு
(ii) பிரச்சினை விருட்சம்
(iii) தர்க்க ரீதியான வேலைச் சட்டக பகுப்பாய்வு
(iv) கிரய - நன்மை பகுப்பாய்வு
(v) திரும்பச் செலுத்தும் முறை
(vi) தேறிய தற்போதைய பெறுமதி
(vii) உள்ளகப் பயன் விகிதாசாரம்
(viii) நிழல் விலையின் பிரயோகம்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

II. ***அடிப்படைப் பேரினப் பொருளியல் (பாட இலக்கம் - 22) - (100 புள்ளிகள்)***

(i) தேசிய கணக்குகள்
(ii) பொருளாதார விருத்தியின் வேகம்
(iii) சமனிலைப்படுத்தப்பட்ட தேசிய வருமானம்
(iv) பெருக்க விளைவுகள்
(v) பண வீக்கம்
(vi) வட்டி விகிதாசாரம்
(vii) அரசிறைமைக் கொள்கைக்கான அறிமுகம்
(viii) இறைமைக் கொள்கைகளுக்கான அறிமுகம்
(ix) வியாபாரச் சக்கரம்

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

III. **தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். (பாட இலக்கம் - 23) - (100 புள்ளிகள்)**

தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம். (அவ் அப்போதைய சந்தர்ப்பங்களில் ஏற்படும் உலகப் பொருளாதார நிலைமைகளுக்கு காலத்துக்கேற்ற வகையிலான தலைப்புக்களுக்கு உரித்துடைய விடைகளை வழங்குதல்.)

**குறிப்பு**.- இப்பாடத்திற்கு குறைந்தது 40% புள்ளிகளைப் பரீட்சார்த்தி பெற்றுக்கொள்ள வேண்டும்.

13. இப்பரீட்சைக்கான பரீட்சை நேர அட்டவணை கீழ்வருமாறு அமைந்துள்ளது :

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | அரசியலமைப்புச் சட்டமும் நிர்வாகச் சட்டமும் | 01-I | 2018.05.05 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | இலங்கையின் சட்ட முறைகள் | 01-II | 2018.05.05 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | குற்றவியற் சட்டமும் சான்றுச் சட்டமும் | 01-III | 2018.05.06 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02 - I | 2018.05.06 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | பொருளியல் மற்றும் சமூகவியல் | 03 | 2018.05.12 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அரச துறையில் நிதி முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடைமுறை | 04 | 2018.05.12 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| 2 | இலங்கைப் பொறியியல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | நிதி முறைகள் | 05-I | 2018.05.06 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-II | 2018.05.06 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 3 | இலங்கை விஞ்ஞான சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2018.05.05 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-III | 2018.05.05 | பி.ப 12.30 - பி. ப. 3.30 |
| 4 | இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | நிதி முறைகள் | 05-II | 2018.05.05 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | நிர்வாகம் | 02-III | 2018.05.05 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 5 | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | அரசாங்க நிதியியல் வழிமுறை | 06 | 2018.05.12 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | சட்டம் மற்றும் முகாமைத்துவம் | 07 | 2018.05.12 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | நிர்வாகம் | 02-IV | 2018.05.13 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அறிக்கை எழுதுதல் மற்றும் முகாமைத்துவத்திற்கு தகவல் களை முன்வைத்தல் | 08 | 2018.05.13 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| 6 | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | திட்டமிடல் எண்ணக்கருக்கள், செயல்முறைத்திட்டம் மற்றும் திட்டமிடும் நிறுவனங்கள் | 09 | 2018.05.12 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | பொருளாதார பகுப்பாய்வும் புள்ளிவிபரங்களும் | 10 | 2018.05.12 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | கருத்திட்டங்கள், திட்டமிடல், அமுல் நடாத்தல், தொடர் நடவடிக்கை மற்றும் மதிப்பீடு செய்தல் | 11 | 2018.05.13 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | தாபன ஒழுங்குவிதிகள் மற்றும் அரச துறையின் நிதியியல் முறைமைகளும் | 12 | 2018.05.13 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | ஆங்கில மொழி | 13 | 2018.05.19 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| 7 | இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன் காண் தடை தாண்டல் பரீட்சை | பொருளாதார மற்றும் சமூகக் கொள்கை(இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 14 | 2018.05.19 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இலங்கை மீதான முக்கிய கவனத்துடன்) | 15 | 2018.05.19 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |

| தொடர் இலக்கம் | பரீட்சையின் பெயர் | பாடம் | பாட இலக்கம் | திகதி | நேரம் |
|---|---|---|---|---|---|
| | | முகாமைத்துவத்திற்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை | 16 | விண்ணப்பங்கள் கோரப் படும் இறுதித் திகதிக்குப் பின்னர் இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனப் பணிப்பாளர் நாயகத்தினால் செயல்முறைப் பரீட்சை நடைபெறும் திகதி விண்ணப்பதாரிகளுக்குப் பின்னர் அறிவிக்கப்படும் | |
| | | இணைப்பு மொழித் (ஆங்கிலம்) தேர்ச்சி | 17 | 2018.05.20 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| 8. | இலங்கைக் கணக்காளர் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | முகாமைக் கணக்கீடு | 18 | 2018.05.19 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அரசாங்க பொது நிதி முகாமைத்துவம் | 19 | 2018.05.19 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு | 20 | 2018.05.20 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| 9. | இலங்கைத் திட்டமிடல் சேவையின் அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | அபிவிருத்தித் திட்டமிடலின் நுட்பங்கள் | 21 | 2018.05.19 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |
| | | அடிப்படைப் பேரினப் பொருளியல் | 22 | 2018.05.19 | பி. ப. 12.30 - பி. ப. 3.30 |
| | | தற்போதைய சர்வதேச பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மற்றும் அவற்றினால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படும் தாக்கம் | 23 | 2018.05.20 | மு. ப. 9.00 - நண்பகல் 12.00 |

14.14.1 **வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைக்கு உரித்துடைய பாடங்களில் சித்தியெய்தும் தேவைப்பாட்டிலிருந்தான விலக்களிப்புக்கள் பின்வரும் விதத்தில் செய்யப்பட வேண்டும் :**

| ***பரீட்சை*** | ***பாடம்*** | ***விலக்களிப்பதற்கு தேவைப்படும் தகைமைகள்*** |
|---|---|---|
| இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | சட்டம் | வழக்குரைஞர் (Barrister), உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் சட்டம் தொடர்பான பட்டதாரியாக இருத்தல். |

**குறிப்பு 1.-** இலங்கை நிர்வாக சேவையின் 2005.11.14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் 2012.07.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.23 ஆந் திகதிவரை ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட இலங்கை நிர்வாக சேவையின் அலுவலர்களுக்கான குறித்த சேவைப் பிரமாணக் குறிப்பின்படி முதலாவது வினைத்திறன்காண் தடையில் சமூகவியல் மற்றும் பொருளியல் பாடங்களுக்கு வழங்கப்படும் விலக்களிப்பு இதற்குப் பொருந்தும்.

14.2 இலங்கை நிர்வாகசேவைப் பிரமாணக் குறிப்பின் 1.5(ஆ) இன் இடைக்கால ஏற்பாடுகளுக்கமைய, மேற்படி சேவைப்பிரமாணக் குறிப்பானது அமுலுக்கு வரும் திகதியன்று (2012.07.01 ஆந் திகதியன்றுக்கு) முன்னைய சேவைப்பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளின்கீழ் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினைச் சித்தியெய்துமாறு அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 2014.12.31 ஆந் திகதியிலுள்ளவாறு அதனைச் சித்தியெய்துவதற்கு இயலாமலிருக்கும் அலுவலர்கள் ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பிற்கமைய ஒவ்வொரு வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினதும் பாடங்களுக்கு ஒத்திசையும்

ஏற்கனவேயுள்ள சேவைப்பிரமாணக் குறிப்பின்கீழ் நடாத்தப்படும் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சைப் பாடங்களை சித்தியெய்துவதன் மூலம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையினைப் பூர்த்திசெய்தல் வேண்டும். ஒத்திசைவுடைய பாடங்கள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

| தொடர் இலக்கம் | 2005 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம14 ஆந் திகதிய 1419/3 ஆம் இலக்க முன்னைய சேவைப் பிரமாணக் குறிப்பு | 2013.12.23 ஆந் திகதிய 1842/02 ஆம் இலக்க புதிய சேவைப்பிரமாணக் குறிப்பு |
|---|---|---|
| 1 | சட்டம் (முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) | சட்டம் (முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) |
| 2 | நிர்வாகம் (முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) | நிர்வாகம் (முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) |
| 3 | பொருளியல் அல்லது சமூகவியல் (முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகவியல் (முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) |
| 4 | அரச துறையின் நிதியியல் முகாமைத்துவம் (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) | அரச துறையின் நிதியியல் முகாமைத்துவம் மற்றும் பெறுகை நடவடிக்கைகள் (முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) |
| 5 | ஆங்கிலம் (முதலாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) | இணைப்பு (ஆங்கிலம்) மொழித் தேர்ச்சி (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) |
| 6 | பொருளியல் மற்றும் சமூகக்கொள்கைகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) | பொருளியல் மற்றும் சமூகக்கொள்கைகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) |
| 7 | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) | அபிவிருத்தி நிர்வாகச் செயற்பாடுகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) |
| 8 | முகாமைத்துவம் மற்றும் அமைப்பு முறைகள் (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) | முகாமைத்துவத்திற்கான தகவல், தொடர்பாடல் தொழில்நுட்பப் பாவனை (இரண்டாம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை) |

15. **பெறுபேறுகளை வெளியிடுதல்.**- இப்பரீட்சைக்காக விண்ணப்பித்த/ தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்படும். இலத்திரனியல் ஆவணம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் தொடர்பாக சனாதிபதி செயலாளரினால் வெளியிடப்பட்ட SP/SB/1/13 ஆம் இலக்க மற்றும் 2009.10.13 ஆந் திகதிய சுற்றறிக்கையின்படி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேறு அலுவலர்களுக்கு வெளியிடப்பட்டதாக கருதப்பட வேண்டும். அதற்கிணங்க, திணைக்களத் தலைவர்கள் அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் பெறுபேற்றின் குறித்த பிரதிகளை அலுவலரின் பிரத்தியேகக் கோவையில் உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பரீட்சையின் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கு அனுமதிக்கப்படாது.

16. இப்பரீட்சை அறிவித்தல் ஏற்பாடுகளில் குறிப்பிடப்படாத ஏதேனும் விடயமானது பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் செயலாளரின் இறுதித் தீர்மானமாகக் கொள்ளப்படும்.

17. இப்பரீட்சை அறிவித்தல் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிடப்படுகின்றது. குறித்த மொழிகளின் சொற்களுக்கிடையில் ஏதேனும் இணங்காமை காணப்படின் சிங்கள மொழியின் சொற்றொடர்கள் வலுவிலிருக்கும் என்பதனை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

ஜே. ஜே. ரத்னசிரி,
செயலாளர்,
பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு.

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2018, மாச்சு 22.

4-369

## வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம்

### இலங்கை தொழில்நுட்ப சேவையின் தரம் III மற்றும் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தில், இலங்கை தொழில்நுட்ப சேவையின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்ப) சேவை வகையைச் சார்ந்த பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு தகுதி வாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இப்பரீட்சை கொழும்பு நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையங்களில் நடைபெறும்.

1. **பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :**

| தொடர் இல. | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | |
|---|---|---|---|
| | | திறந்த | மட்டுப்படுத்தப்பட்ட |
| 01. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிவில் | 02 | 01 |
| 02. | ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் | 02 | 01 |

**2. ஆட்சேர்ப்பு முறை :**

2.1 ***எழுத்துமூல போட்டிப் பரீட்சை***

*பரீட்சை நடைபெறும் திகதி* - இந்தப் பரீட்சை 2018, யூலை மாதத்தில் நடைபெறும். பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். இந்தப் பரீட்சையை இரத்துச் செய்வதற்கு அல்லது பின்போடும் உரிமை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அல்லது அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உண்டு.

2.2 ***பொதுவான நேர்முகப் பரீட்சை***

புள்ளிகள் வழங்கப்படமாட்டாது, பரீட்சார்த்திகளின் தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

2.3 எழுத்துமூல பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆட்சேர்க்கப்படும். எழுத்துமூலப் பரீட்சையில் சித்தியடையும் பரீட்சார்த்திகளின் மொத்தப் புள்ளிகளின் திறமை ஒழுங்கு முறைக்கு அமைய ஆட்சேர்க்க உத்தேசிக்கப்படும் எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கையினர் பொதுவான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமையுள்ளவர்கள் தெரிவு செய்யப்படுவர். சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு வினாப் பத்திரத்திற்கும் ஆகக் குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். தொழிலநுட்ப உத்தியோகத்தர்கள் (சிவில்) மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் தரம் III பதவிக்கான வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்கள் இல்லாத விடத்து மாத்திரம் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்க்கப்படும்.

3. 3.1 ***தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் தரம் III பதவிகள்***

3.1.1 இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துமுடையது. ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைத் தீர்மானத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும். மேலும் விதவைகள், அனாதைகள், தபுதாரர் அனாதைகள் நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் முறைக்கு அமைய பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

3.1.2 தெரிவு செய்யப்படுபவர்கள் மூன்று (03) வருட தகுதிகூர்நிலைக் காலத்திற்குக் உட்படுத்தப்படுவர்.

3.1.3. அவ்வாறே 2014.01.21 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 01/ 2014 இன் பிரகாரம் இரண்டாம் அரசகரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும். (இலங்கை தொழில்நுட்ப சேவை ஏற்பாடுகளுக்கு அமைய)

3.2 ***தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிலுநர் பதவிகள்***

3.2.1 திறந்த அடிப்படையில் அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் பயிலுநர் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும். விண்ணப்பதாரிகள் ஏற்புடைய பயிற்சிக் காலத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த பின்னர் தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதிக்கப்படும் நிறுவனமொன்றினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையுமிடத்து இலங்கை தொழில்நுட்பம் சேவை தரம் III க்கு ஆட்சேர்க்கப்படுவர்.

3.2.2 பயிற்சியின் இறுதியில் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவதற்கு தவறும் பயிலுநர்களுக்கு 06 மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு தனது பயிற்சிக் காலத்தை நீடித்துக் கொள்ள முடியும். அவ்வாறு நீடிப்புச் செய்யப்பட்ட காலப் பிரிவில் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் திறந்த பிரிவின் கீழ் விண்ணப்பித்த பயிலுநர்களது சேவை முடிவுறுத்தப்படும். அத்தோடு மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் விண்ணப்பித்த பயிலுநர்கள் அவர்களது முன்னைய பதவிகளுக்கு மீண்டும் விடுவிக்கப்படுவர்.

4. 4.1 ***தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் தரம் III பதவிகளுக்கு உரித்தான மாதாந்தச் சம்பள அளவுத்திட்டம்***

4.1.1 சம்பளக் குறியீட்டு எண் MN 3 - 2016

4.1.2 சம்பள அளவுத் திட்டம்.- ரூபா 31,040 - 10 × 445 - 11 × 660 - 10 × 730 - 10 × 750 - ரூபா 57,550 (பொது நி.சு. 03/2016) இன் அட்டவணை II பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

4.2 ***தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) மற்றும் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிலுநர் பதவிகளுக்கான மாதாந்த கொடுப்பனவு***

பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2016 இன் அட்டவணை V பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படும்.

5. **வயதெல்லை.-**

5.1 ***திறந்த ஆட்சேர்ப்பு (விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு)***

ஆகக் குறைந்த வயது - 18
ஆகக் கூடிய வயது - 30

"அதற்கிணங்க 2000.05.02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1988.05.02 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னர் பிறந்த திகதியுள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பிப்பதற்குத் தகைமையைப் பெறுவர்."

5.2 ***மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு*** .- வயதெல்லை கிடையாது

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பின் கீழ் தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தில் நிரந்தர திணைக்களப் பதவியொன்றில் ஏற்புடைய துறையில் 05 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டுள்ள பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் மாத்திரம் தகைமை பெறுவர்.

6. **உடல் தகைமைகள்.-** இலங்கையின் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கு மற்றும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7. **தகைமைகள் :**

7.1.1 ***திறந்த ஆட்சேர்ப்புக்கான கல்வித் தகைமைகள் :-***

| பதவி | கல்வித் தகைமைகள் |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III | சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br>மற்றும்<br>க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் கணிதம்/விஞ்ஞானப் பாடத் துறையில் பௌதீகவியல்/ இரசாயனவியல்/ இணைந்த கணிதம்/ உயர் கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞானம்/ கணிதத் துறைகளுக்குரிய 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |

| பதவி | கல்வித் தகைமைகள் |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிலுநர் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்<br><br>க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் கணிதம்/ விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்ப பாடத் துறையில் பௌதீகவியல்/ இரசாயனவியல்/ இணைந்த கணிதம்/ உயர் கணிதம்/ சிவில் தொழில்நுட்பம்/ பொறியியல் தொழில்நுட்பம்/ தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானப் பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பவியல் துறைகளுக்குரிய 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிலுநர் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்<br><br>க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் கணிதம்/ விஞ்ஞானம் அல்லது தொழில்நுட்ப பாடத் துறையில் பௌதீகவியல்/ இரசாயனவியல்/ இணைந்த கணிதம்/ உயர் கணிதம்/ சிவில் தொழில்நுட்பம்/ பொறியியல் தொழில்நுட்பம்/ தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானப் பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பவியல் துறைகளுக்குரிய 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| ஆய்வுக்கூட தொழில்நுட்பவியலாளர் தரம் II | சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்<br><br>க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் கணிதம்/விஞ்ஞானப் பாடத்துறையில் பௌதீகவியல்/ இரசாயனவியல்/உயிரியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞானம்/ கணிதத் துறைகளுக்குரிய 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| ஆய்வுக்கூட தொழில்நுட்பவியலாளர் பயிலுநர் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்<br><br>க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் கணிதம்/விஞ்ஞானம் /தொழில்நுட்ப பாடத் துறைகளில் ஒன்றில் இரசாயனவியல்/உயிரியல் அல்லது பௌதீகவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்ப துறைகளுக்குரிய 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |
| ஆய்வுக்கூட தொழில்நுட்பவியலாளர் பயிலுநர் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் ஒரே அமர்வில் க.பொ.த. (சா. தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.<br><br>மற்றும்<br><br>க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் கணிதம்/விஞ்ஞானம் /தொழில்நுட்ப பாடத் துறைகளில் ஒன்றில் இரசாயனவியல்/உயிரியல் அல்லது பௌதீகவியல் ஆகிய பாடங்களில் இரண்டு (02) பாடங்களுடன் விஞ்ஞானம்/கணிதம்/தொழில்நுட்ப துறைகளுக்குரிய 03 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல். |

*7.1.2 மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தகைமைகள்.-*

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர்/(சிவில்)/ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (தரம் III) | சிங்களம் / தமிழ் / ஆங்கில மொழி விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களுக்கு திறமை சித்திகளுடன் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர்/(சிவில்)/ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்/பயிலுநர் தரம் (ஒரு வருட பயிற்சிக்காலம்) | |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர்/(சிவில்)/ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்/பயிலுநர் தரம் (இரண்டு வருட பயிற்சிக்காலம்) | |

*7.2.1* **திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புக்கான தொழில் தகைமைகள் :-**

| *பதவி* | *தொழில் தகைமைகள்* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III | (i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவகத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) அல்லது<br>(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா (சிவில்) அல்லது<br>(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா (சிவில்) அல்லது<br>(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா (சிவில்) அல்லது<br>(v) தொழிற்துறைக்கு ஏற்புடைய தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) 06 மட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல். (சிவில்) அல்லது<br>(vi) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடன் உசாவி கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்குறிப்பிட்ட் தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிலுநர் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | (i) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் சிவில் துறையில் பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாக பயின்று தேசிய தொழில்நுட்ப (சிவில்) சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ii) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் சிவில் துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியலராளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாக பயின்று ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(iii) உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடன் உசாவி கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல் |

| பதவி | தொழில் தகைமைகள் |
|---|---|
| | மற்றும்<br>மேலுள்ள தொழிற் தகைமையுடன் ஏற்புடைய துறையில் 05 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல். |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பயிலுநர் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | தொழிற் தகைமைகள் அவசியமல்ல |
| ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர் தரம் III | தொழிற் துறைக்கு ஏற்புடைய தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) 06 மட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடன் உசாவி கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல். |
| ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிலுநர் தரம் (ஒரு வருட பயிற்சிக் காலம்) | (i) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் பதவிக்குரிய துறையில் பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாக பயின்று தேசிய தொழில்நுட்ப (சிவில்) சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(ii) மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரியில் சிவில் துறையில் கைத்தொழில் தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேசிய சான்றிதழ் பாடநெறி ஒன்றினை வெற்றிகரமாக பயின்று ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>(iii) உயர்கல்வி அமைச்சு மற்றும் மேற்குறித்த தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடன் உசாவி கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதென மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொாழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்<br>மற்றும்<br>மேலுள்ள தொழிற் தகைமையுடன் ஏற்புடைய துறையில் 05 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல். |
| ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் பயிலுநர் தரம் (இரண்டு வருட பயிற்சிக் காலம்) | தொழிற் தகைமைகள் அவசியமல்ல |

**08. அனுபவம் :-**

*மட்டுப்படுத்தப்பட்ட பயிலுநர் தரத்திற்கு ஏற்புடைய ஒரு வருட மற்றும் இரண்டு வருட பயிற்சிக் காலத்திற்கு தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தில் நிரந்தரப் பதவியொன்றில் ஏற்புடைய துறையில் ஆகக் குறைந்தது 10 வருட செயலூக்கமுள்ள மற்றும் திருப்திகரமான சேவை அனுபவத்தைக் கொண்டிருத்தல்.*

**09. வேறு :-**

(i) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
(ii) விண்ணப்பதாரிகள் நல்லொழுக்கமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.
(iii) ஏதேனும் மதப் பிரிவைச் சேர்ந்த துறவிகள் இந்தப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமைப் பெறமாட்டார்கள்.
(iv) சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தேவையான தகைமைகள் மற்றும் வயதெல்லை என்பன விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தினத்திற்கு எல்லா விதத்திலும் பூரணப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**10. எழுத்துப் பரீட்சை :-**

***10.1 இப்பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.***

| பாடங்கள் | வினா எண் | வினாப் பத்திரத்தின் கட்டமைப்பு | வினாக் களின் எண் ணிக்கை | காலம் | ஆகக் கூடிய புள்ளிகள் | சித்தியடைய வேண்டிய புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|
| உளச் சார்பு | 1 | பல்தேர்வு | 50 | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| விடய அறிவுடன் கூடிய தொழில்நுட்ப பரீட்சை (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) | 2 | கட்டமைக்கப்பட்ட | 20 | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| விடய அறிவுடன் கூடிய தொழில்நுட்ப பரீட்சை (ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்) | 3 | கட்டமைக்கப்பட்ட | 20 | 03 மணித்தியாலம் | 100 | 40% |

**குறிப்பு** – சகல விண்ணப்பதாரிகளும் 1 – உளச்சார்பு வினாப்பத்திரத்திற்கும் மற்றும் வினாப் பத்திரம் 2, 3 ஆகியவற்றில் ஒன்றுக்கு என பூரணமாக இரண்டு வினாப்பத்திரங்களுக்கு தோற்றுதல் வேண்டும். இந்த வினாப்பத்திரங்கள் இரண்டும் ஒரே நாளில் நடாத்தப்படும்.

**10.2 பாடத் திட்டம்**

| பதவி | பாடத்திட்டம் |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் | **01. உளச்சார்பு**<br>விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் ஆற்றல் பொது விவேகம் மற்றும் தீர்மானமெடுக்கும் ஆற்றல் போன்றவற்றை அளவிடும் இந்த வினாப்பத்திரம் 50 வினாக்களைக் கொண்ட பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.<br>**02. விடய அறிவுப் பரீட்சை**<br>1. கட்டடக் கலை வடிவமைப்பு<br>1.1. கட்டமைப்பு வரைதல்<br>1.2. பலப்படுத்தப்பட்ட கொண்கிறீட் தகட்டு அத்திவாரம் இரும்பு மதில்கள், தூண்கள் போன்றவற்றின் கட்டமைப்பு வரைதல் பற்றிய அறிவு.<br>2. கட்டடப் பொருட்கள் பற்றிய விபரங்கள்<br>2.1 சீமெந்து, சுண்ணாம்பு, கொண்கிறீட் கல், செங்கல், பலகை ஆதாரக் கல், நிறப் பூச்சு மற்றும் வார்னிஸ் வகைகள், பிளாஸ்திக் மற்றும் கண்ணாடி, கட்டடம் அமைக்கும் போது பொருட்களைப் பயன்படுத்தும் முறை மற்றும் அவற்றின் தரம் பற்றிய அறிவு<br>3. கட்டட பரிமாண அளவுகளை தயாரித்தல் மற்றும் மதிப்பீடுகளை தயாரித்தல், பரிமாணப் பத்திரங்களை தயாரித்தல் மற்றும் கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு தேவையான கட்டடப்பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் எண்ணிக்கையை மதிப்பீடு செய்தல். |

| பதவி | பாடத்திட்டம் |
|---|---|
| | 4. அளத்தல் மற்றும் மட்டம் எடுத்தல்<br>4.1 சங்கிலி அளவை மட்டம் எடுத்தல், தியோடலைட் பயன்பாடு பற்றிய மற்றும் மேற்பரப்பு தள அளவை பற்றிய அறிவு.<br><br>5. கட்டடங்களை நிர்மாணித்தல்<br>5.1 அத்திவாரம், சுவர் கட்டுதல், மரத்திலான கூரை, இரும்பு மதில், தூண்கள், கொண்கிறீட் தூண்கள், அத்திவார தட்டுகள், படிக்கட்டுகள் ஆகியவற்றை அமைக்கும் முறை மற்றும் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள்<br>6. கட்டமைப்புகள்<br>6.1 பகுப்பாக்க வலு, நெகிழ்ச்சி வலு போன்றவற்றை கணக்கிடுதல் மற்றும் வடிவமைத்தல்<br><br>7. சேவைகள்<br>7.1 நீர் மின்சாரம், சுகாதாரம்<br><br>8. பாதுகாப்பு முறைகள்<br>8.1 வேலைத்தளமொன்றில் இருக்க வேண்டிய பாதுகாப்பு முறைகள் |
| ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர் | 01. **உளச்சார்பு**<br>விண்ணப்பதாரியின் தர்க்கிக்கும் ஆற்றல், பொது விவேகம் மற்றும் தீர்மானமெடுக்கும் ஆற்றல் போன்றவற்றை அளவிடும் இந்த வினாப்பத்திரம் 50 வினாக்களைக் கொண்ட பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.<br><br>**02. விடய அறிவுப் பரீட்சை**<br>1. ஆய்வுகூட தொழில்நுட்பத்தின் அடிப்படைகள் மற்றும் வளர்ச்சி<br>1.1 நுண்ணுயிரியல்<br>1.2 இரசாயனவியல்<br>1.3 குருதியியல்<br>1.4 சிகிச்சை நோயியல்<br>1.5 நுண் உடற்கூற்றியல்<br><br>2. ஆய்வுகூட முகாமைத்துவம்<br>3. ஆய்வுகூட உபகரணங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு<br>4. ஆய்வுகூட பாதுகாப்பு முறைகள்<br>5. இரசாயனப் பொருட்கள் வழங்கல் செய்தல், களஞ்சியப்படுத்தல், விநியோகித்தல் மற்றும் கணக்கு வைத்தல்<br>6. பயன்பாட்டுக்கு எடுக்க முடியாத உபகரணங்கள் மற்றும் பொருட்களை நீக்குதல்<br>7. ஆய்வுகூட மாதிரி முகாமைத்துவம்<br>8. ஆய்வுகூடமொன்றில் நிகழ முடியுமான அவசர நிலைமை முகாமைத்துவம்<br>9. நோய் நிர்ணயம் மற்றும் கால்நடை மருத்துவத் துறையின் பயன்பாடுகள் மற்றும் தொடர்புகள் |

11. **பரீட்சைப் பெறுபேறுகள்**.- பரீட்சைக்குத் தோற்றிய சகல விண்ணப்பதாரிகளுக்கும் தனிப்பட்ட முறையில் அறிவிப்பதற்கோ அல்லது இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கோ இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

12. **பரீட்சை நிபந்தனைகள் :**

12.1 பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரிகள் விரும்பும் ஒரு மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரர்கள் சகல வினாப் பத்திரங்களுக்கும் ஒரே

மொழியிலேயே விடையளித்தல் வேண்டும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடக மொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. சகல விண்ணப்பதாரிகளும் தமக்குரிய இரண்டு வினாப்பத்திரங்களுக்கும் விடையளித்தல் வேண்டும். மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுள்ள விண்ணப்பதாரிகளுக்கு திறந்த போட்டிப் பரீட்சைக்கும் தோற்றுவதற்கு தகைமை பெற்றிருப்பின் ஒரு விண்ணப்பத்தை மாத்திரம் பயன்படுத்தி விண்ணப்பிக்க முடியும்.

12.2 பரீட்சைக் கட்டணம் 600 ரூபா ஆகும். இந்த தொகையை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு **2003-02-13** இற்கு வரவு வைத்து இலங்கையின் எந்தவொரு தபால் நிலையம்/மாவட்ட/பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயருக்கு வழங்கப்படுகின்ற, பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் கழறாதவாறு ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் கட்டாயமானதாகும். பரீட்சைக் கட்டணமாக காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எத்தகைய காரணத்தைக் கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதோடு அப்பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்கைக்கும் மாற்றீடு செய்து கொள்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற் கொள்க. பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருப்பது பிரயோசனமானது.

12.3 இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின் போது, விண்ணப்பதாரியின் அடையாளத்தை பரீட்சை நிலைய அதிபருக்கு உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை;

(ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

***குறிப்பு.***- பரீட்சைக்குத் தோற்றும் முதல் நாள் பரீட்சை நிலைய அதிபருக்கு தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி ஒருவருக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அல்லது ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக் கொண்டதாக கருதப்படமாட்டாது.

12.4. விண்ணப்பப்படிவத்தை, 21 செ.மீ. - 29.7 செ.மீ. அமைய A4 அளவிலான காகிதத்தில் 01 தொடக்கம் 03.1 வரையிலான தகவல்களை முதல் பக்கத்திலும் 3.2 தொடக்கம் அதன் பின்னர் வரும் தகவல்களை அடுத்துவரும் பக்கங்களில் அமையுமாறு விண்ணப்பத்தை தயாரித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழியிலேயே விண்ணப்பத்தை பூரணப்படுத்தல் வேண்டும். விண்ணப்பத்தின் தலைப்பில் உள்ள பரீட்சையின் பெயரை சிங்கள விண்ணப்பங்களில் சிங்கள மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலமொழிகளிலும் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழிகளிலும் குறிப்பிடுதல் வேண்டும். உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத பூரணமற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். எனவே விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு முன்னர் இந்த பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பத்திற்கு அமைவாக விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட்டுள்ளதா, சகல தகவல்களும் உள்ளடக்கப்பட்டு பூரணமாக நிரப்பப்பட்டுள்ளதா, உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதன் தகவல்கள் விண்ணப்பத்துடன் ஒட்டப்பட்டுள்ளதா என்பன பற்றி திருப்தியடைதல் வேண்டும். பூரணப்படுத்திய விண்ணப்பத்தின் ஒரு பிரதியை தம்வசம் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கவும்.

12.5 ***பிழையான தகவல்களுக்கான தண்டனைகள் :***

விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்குதல் வேண்டும். இப்பரீட்சையின் சட்டத்திட்டங்களுக்கு அமைய எவரேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்று தெரியவருமிடத்து அவர் எச்சந்தர்ப்பத்திலும் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவார்.

13. 13.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் உள்ளவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற பூர்வாங்க முடிவின் பிரகாரம் அறிவித்தலிலுள்ள வயதெல்லைக்குள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்திய விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்படும். அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்ட உடன் அது தொடர்பான பத்திரிகை அறிவித்தலொன்று பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும் அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 தினங்களுக்கு பின்னர் தமது அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் அறிவித்தலில்

குறிப்பிடப்பட்டுள்ள படி அது தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள் பிரிவில் உசாவுதல் வேண்டும். அவ்வாறு உசாவும் போது விண்ணப்பதாரி தான் விண்ணப்பிக்கும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப்பெயர், தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியிலுள்ளவரொருவரெனின் அந்தத் தகவல்களுடன் தொலைநகல் மூலம் அனுமதி அட்டையின் பிரதியொன்றை துரிதமாகப் பெற்றுக்கொள்ள விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கம் ஒன்றுடன் கோரிக்கை கடிதமொன்றை அறிவித்தலில் உள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்புவது பயனுள்ளதாகும். அவ்வாறு உசாவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவும் ஏதேனும் தகவல்களை உறுதிப்படுத்த தம்வசம் வைத்துக்கொண்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டுப் பிரதி மற்றும் விண்ணப்பத்தை அஞ்சல் செய்த பதிவுத் தபால் சிட்டை என்பவற்றை தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனமளிக்கும்.

13.2 பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்பட்டுள்ளனர். அந்த சட்டதிட்டங்களை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கும் தண்டனைக்கு ஆளாகுதல் வேண்டும்.

13.3 ***விண்ணப்பதாரியின் அடையாளம் :***

பரீட்சை நிலைய அதிபர் திருப்தியுறும் வகையில் அனைத்து விண்ணப்பதாரிகளும் பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும்.

14. அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில், அரச கூட்டுத்தாபனங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தனது திணைக்கள /நிறுவனத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். நிறுவனமொன்றிலிருந்து பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தை தான் பணியாற்றும் நிறுவனத் தலைவர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ஓய்வூதிய உத்தியோகத்தர்/தனது பிரிவின் கிராம அலுவலர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/ பிரசித்திபெற்ற நொத்தாரிசு/ முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் ரூபா 2,40,360 அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது பௌத்த விகாரையொன்றின் பிரதம பிக்கு அல்லது தலைமைப் பிக்கு அல்லது ஏனைய சமயப் பெரியார் ஒருவர் மூலம் உறுதிப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

15. பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை 2018, மே 02 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பதவியைக் குறிப்பிட்டு ''தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம்'' எனக் குறிப்பிடுக. ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு பதவிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டிய முகவரி:
பரீட்சை ஆணையாளர் நாயகம்,
ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைப் பிரிவு,
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
த. பெ. 1503,
கொழும்பு.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுக்கப்படும் இந்த அறிவித்தலில் பதப்பிரயோகங்களுக்கு மத்தியில் முரண்பாடு எழுமிடத்து சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும்.

17. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக பணிப்பாளர் நாயகம், தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களத்தினால் தீர்மானிக்கப்படும்.

வை. டி. எஸ். எஸ். மல்சிங்க,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம்.

இல. 251/2 பீ, 251/ஏ,கொழும்பு வீதி,
வத்தேகெதர சந்தி,
மஹரகம.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வலுவாதார அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சு**

தேசிய விலங்கியல் பூங்கா திணைக்களம்

**இலங்கை தொழில்நுட்ப சேவை தரம் III மற்றும் பயிலுநர் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவம் - 2018**

**Recruitment of Officers in Class III of the Sri Lanka Technical Service Application for Open and Competitive Examination - 2018**

பரீட்சைக்குத் தோற்றும் ஊடக மொழி : தோற்றுவது திறந்த/மட்டுப்படுத்தப் பரீட்சைக்கா என்பது பற்றி :

சிங்களம் - 2
தமிழ் - 3 ☐
ஆங்கிலம் - 4
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

திறந்த - 1
மட்டுப்படுத்தப்பட்ட - 2 ☐
திறந்த/மட்டுப்பத்தப்பட்ட இரண்டுக்கும் - 3
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

விண்ணப்பிக்கும் பதவி

* ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் தரம் III - 1
* தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) தரம் III - 2
* ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (ஒரு வருட பயிற்சிக்காலம்) - 3
* ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் (இரண்டு வருட பயிற்சிக்காலம்) - 4
* தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) (ஒரு வருட பயிற்சிக்காலம்) - 5
* தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) (இரண்டு வருட பயிற்சிக்காலம்) - 6

☐
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

(ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு பதவிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும்)

01. 1.1 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ...............................
(உதா. :- HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

1.2 இறுதியில் வரும் பெயரை ஆரம்பத்தில் குறிப்பிட்டு ஏனைய பெயர்களின் முதலெழுத்துக்களை அதன் பின்னர் குறிப்பிடுக. (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) : ...............................
(உதா. :- GUNAWARDHANA H.M.S.K)

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ...............................

1.4 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) : ...............................

2.2 அனுமதி அட்டை அனுப்பப்பட வேண்டிய முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :...............................

03. 3.1 பால்நிலை :
ஆண் - 0
பெண் - 1 ☐
(ஏற்புடைய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக.)

3.2 பிறந்த திகதி : வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

3.3 விண்ணப்பம் கோரப்படும் திகதிக்கு வயது :
வருடங்கள்: ☐☐ மாதங்கள்: ☐☐ நாட்கள்: ☐☐

3.4 தொலைபேசி இலக்கம் :
நிலையான ☐☐☐☐☐☐☐☐☐☐
கையடக்க ☐☐☐☐☐☐☐☐☐☐

04. 4.1 மாவட்டத்தில் எப்போதிருந்து வசிக்கின்றீர்கள் : ...............................
4.2 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு : ...............................
4.3 வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு : ...............................

05. கல்வித் தகைமைகள் :
5.1 க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சை :
I. பரீட்சை வருடம் மற்றும் மாதம் : : ...............................
II. சுட்டெண் : ...............................
III. பெறுபேறு : ...............................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.2 க. பொ. த. (உயர் தரப்) பரீட்சை :
I. பரீட்சை வருடம் மற்றும் மாதம் : : ...............................
II. சுட்டெண் : ...............................
III. பெறுபேறு : ...............................

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

06. வேறு தகைமைகள் : ...............................
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

07. தாங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றுக்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? (ஏற்புடைய கூட்டில் (✓) புள்ளடியிடுக) ஆம் எனில் விபரத்தை குறிப்பிடுக :

ஆம் ☐ இல்லை ☐

..............................................................................................................................................
..............................................................................................................................................
..............................................................................................................................................

08. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரங்கள் :

I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் : ...............................
II. பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி : ...............................
III. செலுத்திய தொகை : ...............................

பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை வைத்திருப்பது பயனுள்ளது.)

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன் இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது சரியாகப் பூர்த்திசெய்யாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்திசெய்திருப்பதனால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள இவ் உறுதியுரை பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

(இ) மேலும் பரீட்சையை நடாத்துதல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடுதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்படுவேன் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

(ஈ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்யமாட்டேன்.

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :-
இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி .................................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ............................................... ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பற்றுச்சீட்டு இங்கு ஒட்டப்பட்டுள்ளது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி :-----.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.

11. அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்

**அமைச்சு, திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் உறுதியுரை :-**

இந்த விண்ணப்பதாரியான திரு./ திருமதி/ செல்வி .......................................... தற்போது இந்த அமைச்சில் / திணைக்களத்தில்/நிறுவனத்தில் .............................. ஆக நிரந்தர /தற்காலிக உத்தியோகத்தராக கடமை புரிகின்றார் என்றும் அவர் இந்தப் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஆற்றல் உள்ளவர் என்றும் குறிப்பிடுகின்றேன். ஏதேனும் காரணத்தினால் இந்தப் பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து இந்த அமைச்சில் / திணைக்களத்தில்/ நிறுவனத்தில் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

.......................................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

பெயர் :-----.
பதவி :-----.
அமைச்சு /திணைக்களம்/நிறுவனம் :-----.
திகதி :-----.

*4 - 317*

## கல்வி அமைச்சு

### ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தேர்ந்தெடுத்தல் - 2018/2019

கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கமைய தகைமைகளைப் பூர்த்தி செய்யும் பட்டதாரி அல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியினைத் தொடர்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆசிரியர் கல்வி பாடநெறியினை இதுவரை பூர்த்தி செய்யாத ஆசிரியர்கள், ஆசிரியர் உதவியாளர்கள், இச் சுற்றறிக்கை இலக்கம் 28/2016 இற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2018, ஏப்பிறல் 27 ஆந் திகதிக்கு முன்னர் "கல்விப் பணிப்பாளர், ஆசிரியர் கல்வி நிருவாகக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய, பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும்.

இச்சுற்றறிக்கை, விண்ணப்பப்படிவம் மற்றும் ஆலோசனைப்படிவத்தை கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மூலம் (www.moe.gov.lk) எந்தவொரு வலயக் கல்வி அலுவலகத்தின் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

சுனில் ஹெட்டிஆரச்சி,
செயலாளர்.

கல்வி அமைச்சு,
இசுருபாய, பத்தரமுல்ல,
2018, ஏப்பிறல் 06.

4 - 335

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும் www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 13700 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 13700 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,30000 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,60000 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | ரூபா ச. விலை ரூபா ச. | ரூபா ச. தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள** அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை-2018**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **ஏப்பிறல்** | .. | வெள்ளி | 06.04.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.03.2017 |
| | | வியாழன் | 12.04.2018 | .. | நண்பகல் 12 | வியாழன் | 29.03.2017 |
| | | வெள்ளி | 20.04.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.04.2018 |
| | | வெள்ளி | 27.04.2018 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.04.2018 |
| **மே** | .. | வெள்ளி | 04.05.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.04.2018 |
| | | வெள்ளி | 11.05.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.04.2018 |
| | | வெள்ளி | 18.05.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.05.2018 |
| | | வெள்ளி | 25.05.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.05.2018 |
| **யூன்** | .. | வெள்ளி | 01.06.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.05.2018 |
| | | வெள்ளி | 08.06.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.05.2018 |
| | | வியாழன் | 14.06.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.06.2018 |
| | | வெள்ளி | 22.06.2018 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.06.2018 |
| | | வெள்ளி | 29.06.2018 | .. | நண்பகல் 12 | வியாழன் | 14.06.2018 |

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.